வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 02.02.2023 வியாழக்கிழமை | இதழ் : 55 | பக்கங்கள் : 16




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

## 13ஆம் திருத்தம்:

# ஐ. நாவில் மீண்டும் இந்தியா வலியுறுத்து

### மாகாண தேர்தலை நடத்துவதும் முக்கியம்

ஜெனிவா, பெப்ரவரி 02

13ஆவது திருத்தத்தை இலங்கை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். அத்துடன், மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துவதும் முக்கியம் என்று இந்தியா நம்புகிறது என்று ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் இந்திய பிரதிநிதி வலியுறுத்தியுள்ளார். 11

## அரசாங்கம் - தமிழர் பேச்சு:

# உண்மையான முடிவுகளை காண அமெரிக்கா ஆர்வம்!

### சிறுபான்மை தலைவர்களிடம் கூறினார் நூலண்ட்

கொழும்பு, பெப். 02

இலங்கை அரசாங்கத்துக்கும் சிறுபான்மை தமிழ்த் தலைவர்களுக்கும் இடையிலான பேச்சுகளில் உண்மையான முடிவுகள் உருவாகுவதை காண அமெரிக்கா ஆர்வமாக உள்ளது என்று அமெரிக்க 11



# 13 அமுலானால் மீண்டும் இனக்கலவரம் வெடிக்கும்!

### சரத் வீரசேகர சொல்கிறார்

கொழும்பு, பெப். 02

13ஆவது திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்பட்டால் நாட்டில் சிங்களை - தமிழ் இனக் கலவரம் மீண்டும் தோற்றம் பெறும். ஆகவே, 13ஆவது திருத்தத்துக்கு மகா சங்கத்தினர் கடுமையான எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும் என்று ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன், அரசமைப்பை 11

# பயங்கரவாத சட்டத்தை இலங்கை நீக்கவேண்டும்!

### பிரிட்டன், அமெரிக்கா வலியுறுத்து

நியூயோர்க், பெப். 02

இலங்கையில் நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடுப்பு சட்டம் நீக்கப்பட வேண்டும் என்று பிரித்தானியா, அமெரிக்க பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 42ஆவது கூட்டத் தொடரில் முழுநிறை காலமுறை மீளாய்வு செயல்குழுவில் மனித உரிமைகள் தொடர்பில் ஆராயப்பட்டன.

இதில் உரையாற்றிய பிரித்தானிய, அமெரிக்க பிரதிநிதிகள் இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத 11

# பெற்றோலின் விலை ரூ. 30ஆல் எகிறியது!

கொழும்பு, பெப். 02

பெற்றோலின் விலை லீற்றருக்கு 30 ரூபாய் அதிகரிக்கப்ப ட்டுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இதன்படி, லீற்றர் 370 ரூபாயாக உள்ள 92 ஒக்ரென் பெற்றோல் 11

# 75ஆவது சுதந்திர தின நிகழ்வில் கத்தோலிக்க சபை பங்கேற்காது!



கொழும்பு, பெப். 02

75ஆவது சுதந்திர தின கொண்டாட்டத்தில் கத்தோலிக்க திருச்சபையின் பிரதிநிதித்துவம் இருக்காது என்று கத்தோலிக்க திருச்சபையின் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். நாட்டின் பொருளாதாரமும் சட்டத்தின் ஆட்சியும் வீழ்ச்சியடைந்துள்ள இந்த நேரத்தில் பெரும் பணத்தை செலவழித்து சுதந்திர 11



# அறிவித்தபடியே மார்ச் 9 தேர்தல்!

### நூலண்டிடம் ஜனாதிபதி உறுதி

### 13 குறித்தும் தெளிவுபடுத்தினார்

கொழும்பு, பெப். 02

உள்ளூராட்சி சபை தேர்தல் மார்ச் 9ஆம் திகதி நிச்சயம் நடத்தப்படும் என்று தன்னை சந்தித்த அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்க செயலாளர் விக்ரோறியா நூலண்டிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 11

# 3 அரசியல் கைதிகள் நேற்றிரவு விடுதலை

கொழும்பு, பெப். 02

மூன்று தமிழ் அரசியல் கைதிகள் நேற்றிரவு விடுதலை செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த குணசிங்கம் கிருபானந்தம், கிளிநொச்சியைச் சேர்ந்த செல்லையா சதீஸ்குமார், மன்னாரை சேர்ந்த விக்ரர் ரொபின்சன் ஆகியோரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்களில் இருவர் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர்களாவர். 11

# சீனா வழங்கிய உத்தரவாதம் கடனை சீரமைக்க போதாது!

### விக்ரோறியா நூலண்ட் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 02

கடன் மறுசீரமைப்பு விடயத்தில் இலங்கைக்கு சீனா போதியளவு நடவடிக்கையை எடுக்கவில்லை என்று அமெரிக்காவின் அரசியல் துணை இராஜாங்க செயலர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த பின்னர் ஊடகங்களிடம் 11

# அமைதியற்ற நிலையின்போதும் அரசமைப்பை பின்பற்றினோம்!

### ஐ. நாவில் அமைச்சர் அலி சப்ரி

ஜெனிவா, பெப். 02

அமைதியின்மையின்போது அரசமைப்பு செயல்முறைகளுக்கு இணங்கி செயல்பட்டதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 42ஆவது கூட்டத் தொடரில் முழுநிறை காலமுறை மீளாய்வு செயல்குழுவில் இலங்கை 11

உள்ளூராட்சி சபை தேர்தல் - 2023

தமிழ் தேசிய கூட்டமைப்பு

தமிழின ஆன்மாவின் ஒருமித்த சின்னம்!

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி

கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது...!

வடக்கு மாகாண சபையின் இறுதிக் காலப்பகுதி அது. அப்போது அதன் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த சி. தவராசா பலரின் கவனத்தைப் பெற்ற ஒருவராக இருந்தார்.

ஐந்து ஆண்டு கால விக்னேஸ்வரனின் ஆட்சிக்காலம் பற்றி அவர் இருபத்தி ஐந்துக்கும் அதிகமான கேள்விகளை முதலமைச்சரான விக்னேஸ்வரனிடம் சபையில் கேட்டார்.

கேள்விகளை கேட்டதும், விக்னேஸ்வரனால் பதில் சொல்ல முடியவில்லை. மறுநாள் பதிலளிப்பதாகக் கூறிவிட்டு சென்றுவிட்டார்.

அவர் முதலமைச்சராக அரசியலுக்கு வருவதற்கு முன்னதாக அவர் நீண்டகாலம் நீதிபதியாக இருந்தவர். அவரிடம் யாரும் கேள்வி கேட்டிருக்கமாட்டார்கள். இரு தரப்பு வாதங்களையும் அதாவது ஒருவர் கேள்விக்கு மற்றவர் அளிக்கும் பதில்களை வைத்துத் தீர்ப்பு எழுதியே பழக்கப்பட்ட மனுசனிடம்போய் தவராசா கேள்விகள் கேட்டால் அவருக்கு எப்படியிருக்கும்.

மறுநாள் விக்னேஸ்வரனின் பதில்களுக்காக தவராசா ஆர்வமாக இருந்தாரோ தெரியவில்லை. ஆனால், இந்த ஊர்க்குருவியைப் போன்ற ஊடகவியலாளர்கள் ஆர்வத்துடன் காத்திருந்தனர்.

சபை கூடியதும் அவர் ஒவ்வொரு கேள்வியாக பதிலளிப்பார் என்று பார்த்தால்,

போட்டாரே ஒரு போடு: 'தவராசா ஈ. பி. டி. பிக்காரர். அது ஓர் ஒட்டுக்குழு. அவர் இப்போது அங்கும் இல்லை. அந்த ஆதங்கத்தில் இப்படி கேள்வி கேட்டிருக்கிறார்.'

எல்லோரும், 'ஆகா... கொடுத்தார் எமது முதலமைச்சர்' என்று தங்களுக்குள் பேசிக்கொண்டனர்.

தவராசா கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்லவேண்டிய தேவை இப்போது முதலமைச்சருக்கு இல்லாமல் போய்விட்டது.

இந்தச் சம்பவம்தான் யாழ்ப்பாணம் மாநகர சபையில் நடந்த சம்பவம் ஒன்றைப் பற்றிய செய்திகளைப் படித்தபோது வந்தது.

யாழ்ப்பாணத்தில் பல முக்கிய இடங்களில் விளம்பரப் பலகைகளை வைப்பதற்காக பிரபல தனியார் நிறுவனம் ஒன்றுடன் மாநாகர சபை ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருந் தது. மணிவண்ணன் முதல்வராக இருக்கும்போது செய்யப்பட்ட ஒப்பந்தம் அது. அந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது பற்றி சபைக்கு தெரிவிக்கப்படவில்லை என்பது தான் தற்போது முதல்வராகியிருக் கும் ஆனல்ட் தலைமையில் கடந்த வாரம் கூடிய சபையின் குற்றச் சாட்டு.

சபையின் அனுமதி இல்லாமல் செய்யப்பட்ட அந்த ஒப்பந்தத்தில் முதல்வரும் ஆணையாளரும் கையெழுத்திட்டபோதிலும் அதன் பிரதிகூட முதல்வர் அலுவலகத்தில் இல்லை என்பதும், அந்த ஒப்பந்தத்தில் அந்த தனியார் நிறுவனத்தின் நலன்கள் மாத்திரமே கவனத்தில் கொள்ளப்பட்டிருப்பதாகவும், மாநகர சபையின் நலன்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படவில்லை என்பதும் சபையின் முக்கிய குற்றச்சாட்டு. அதனால்தான் அந்த ஒப்பந்தம் குறித்து விசாரணை செய்ய வேண்டும் என்று ஆளுநரைக் கோருகின்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர், முன்னாள் முதல்வர் மணிவண்ணன் ஓர் ஊடகவியலாளர் மாநாடு நடத்தி தன்னிலை விளக்கம் தந்தார்.

அந்த ஒப்பந்தத்தின் மூலம் சபைக்கு எட்டுக் கோடி ரூபாய் வருமானம் கிடைக்கவிருந்ததாகவும், அந்தப் பணத்தைக் கொண்டு குளம் ஒன்றைப் புனரமைக்க தான் அடிக் கல்லும் நாட்டியதாகவும் மணிவண்ணன் விளக்கமளித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி, அவர் திரும்பத்திரும்ப சட்டவிரோத முதல்வர் என்றே விளித்து பதில்கூறியதையும் காணமுடிந்தது.

ஏதோ எட்டுக் கோடி ரூபாய் வருமானம் கிடைக்கவிருக்கின்றது. அதற்காக ஒரு தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்வதெனில், அந்த நிறுவனம் தனக்கு இலாபமில்லாமலா இத்தனை பெரிய தொகையை வழங்க முன்வந்தது என்ற கேள்வியை மணிவண்ணன் முதலில் தனக்குள் கேட்டுப்பார்த்திருக்க வேண்டும். இப்படி ஒரு தனி யார் நிறுவனத்துக்கு விளம்பரப் பலகை அமைப்பதற்கு கொடுக்க விரும்பியிருந்தால், அதனைக்கூட உரிய விளம்பரங்களைச் செய்து, கேள்விகோரி செய்திருந்தால், அந்த நிறுவனத்தைவிட அதிக தொகையை கொடுத்து ஒப்பந்தம் செய்ய வேறு நிறுவனம் முன்வந்தி ருக்கலாமே.

இங்கே எந்தவித சபை அனுமதியும் இல்லாமல் - அதிகம் ஏன் சபைக்கே தெரியால் ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டது பற்றி சபை குற்றம்சாட்டுகின்றபோது, 'ஐயோ.. எட்டுக்கோடி வருமானத்தை இல்லாமல் செய்யப் பார்க்கிறார்களே என்றும், அவர் சட்டவிரோத முதல்வர் எனவும் சொல்வது பிரச்னையை திசை திருப்ப மாத்திரமே உதவும்.

அதைவிட முக்கியமானது, நீதிமன்றத்தில் உள்ள ஒரு விடயத்தை, அதன் தீர்ப்பு வருவதற்கு முன்னால் அவர் சட்டவிரோத முதல்வர் என்று சொல்வது சரியானதுதானா என்பதை சட்டத்தரணியான மணிவண்ணன் அறியாமல் இருக்கமாட்டார்.

தன்னிடம் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்காமல், கேள்வி கேட்டவர் பற்றி தனிப்பட்ட தாக்குதலை நடத்திய விக்னேஸ்வரனின் பாணியில், அவரின் கட்சியில் புதிதாக சேர்ந்த மணிவண்ணன் பயணிக்க முயல்கிறார் போலும்.!

- ஊர்க்குருவி

# களவாடிய 17 பவுண் நகைகளை அடகுவைக்க முயன்றவர் கைது!

வடமராட்சி, பெப். 02

களவெடுத்த நகைகளை நிதி நிறுவனம் ஒன்றில் அடகு வைக்க முயன்றவரை பருத்தித்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர். அவரிடமிருந்து 17 பவுண் நகைகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

பருத்தித்துறை - திக்கத்தில் கடந்த திங்கட்கிழமை இரவு வீடு புகுந்து 17 பவுண் நகைகள் களவாடப்பட்டன. இந்தச் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், களவாடிய நகைகளை நெல்லியடி பகுதியிலுள்ள தனியார் நிதி நிறுவனம் ஒன்றில் அடகு வைக்க முற்பட்ட வேளை அவரை பருத்தித்துறை பொலிஸார் கைது செய்தனர். அவரிடமிருந்து 17 பவுண் நகைகளும் கைப்பற்றப்பட்டன. (ஐ)

# விழித்தெழு விழிப்புணர்வு நாடகம் கலாசார நிலையத்தில் ஆற்றுகை!





யாழ்ப்பாணம், பெப். 02

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் கூத்தாட்டு அவைக் குழாத்தின் “விழித்தெழு” என்னும் பெயரில் அமைந்த வீதி நாடகம் யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தில் ஆற்றுகை செய்யப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த நாடக ஆற்றுகை ஏற்பாடு செய்யப்பட்டது.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா தலைமையில் நேற்று மாலை நடைபெற்ற விழித்தெழு வீதி நாடக ஆற்றுகையில் யாழ். இந்தியத் துணைத் தூதரக அதிகாரி ராம் மகேஷ் உள்ளிட்ட இந்தியத் தூதரக அதிகாரிகள், கலாசார உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

10 கலைஞர்கள் பங்கு கொண்ட இந்த நாடக ஆற்றுகையானது போதைப் பொருட்களிலிருந்து எவ்வாறு மாணவர்கள் மற்றும் இளைய சமூகம் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம் என்பதை மையப் பொருளாக கொண்டு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் நாடகவியலாளர் விஜயரூபனின் நெறியாள்கையில் அரங்கேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# காரைநகர் - ஊர்காவற்றுறை கடற்பாதை பழுதடைந்தது!

யாழ்ப்பாணம், பெப். 02

காரைநகர் - ஊர்காவற்றுறைக்கு இடையே சேவையில் ஈடுபட்ட கடற்பாதை பழுதடைந்ததால் கடற்பயணத்தில் ஈடுபடும் பயணிகள் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்கின்றனர்.

காரைநகர், வட்டுக்கோட்டை பகுதிகளில் இருந்து ஊர்காவற்துறையில் நீதிமன்றம், வைத்தியசாலை, பிரதேச செயலகம் ஆகியவற்றில் கடமை புரியும் உத்தியோகத்தர்கள் மற்றும் வேறு தேவைகளுக்கு பயணம் செய்வோர் குறித்த கடற்பாதையை பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த கடற்பாதை பழுதடைந்ததால் கட்டணம் செலுத்தி படகு மூலம் பயணம் செய்யவேண்டிய சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இந்தக் கடற்பாதையானது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கண்காணிப்பின் கீழ் இயங்கி வந்தது. இருப்பினும், அவர்களிடம் நிதி வசதி இல்லாத காரணத்தால் அந்த பாதையை சீர்செய்ய முடியவில்லை.

இதனை சரி செய்வதற்காக காரைநகர் பிரதேச சபையில் “குறித்த கடற்பாதையை பிரதேச சபை பொறுப்பேற்று பராமரிப்பது” என தீர்மானம் கொண்டுவரப்பட்டது. ஆனால், கடற்பாதையை பிரதேச சபையிடம் கையளிக்க வீதி அபிவிருத்தி அதிகாரசபை மறுத்துள்ளதாக காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் க. பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

எனவே, பிரதேச சபை அல்லது வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஒரு முடிவுக்கு வந்து இந்த கடற்பாதையை மீளவும் சேவையில் ஈடுபடுத்துமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஐ)

# நாகரிகமற்ற கருத்துகளை சுமந்திரன் வெளியிடுகிறார்

சுரேஷ் பிறேமசந்திரன்

யாழ்ப்பாணம், பெப். 02

ஜனாதிபதி சட்டத்தரணியான எம். ஏ. சுமந்திரன் தன்னை ஒரு கல்விமானாக காட்டிக்கொண்டு மூன்றாம் தரமான அரசியல் நாகரிகமற்ற கோமாளித்தனமான கருத்துக்களை வெளியிட்டு வருகிறார் என்று ஈ. பி. ஆர். எல். எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்று புதன்கிழமை யாழ் ஊடக அமையத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுமந்திரனின் கருத்துகள் தனிநபர் மீது சேறுபூசும் நடவடிக்கையாகவேதான் கருதுகிறோம். தமிழ்த் தேசிய பரப்பிலுள்ள சகல கட்சிகளையும் ஒன்றிணைக்கும் செயல்பாடுக்கு சுமந்திரனே முட்டுக்கட்டையாக இருந்தார். அத்துடன், தமிழ்த் தேசிய கூட்டமைப்பை பதிவு செய்யவேண்டும் என்ற தீர்மானம் முன்வைக்கப்பட்ட போதும் அதுவும் அவர்களால் நிராகரிக்கப்பட்டிருந்து என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
02.02.2023 வியாழக்கிழமை
பிலவ வருடம், தை 19

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# அமெரிக்காவின் நிலைப்பாடு தெரிந்தது?

இலங்கை வந்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான கீழ்நிலை செயலர் விக்டோரியா நூலண்ட் நேற்றைய தினம், தமிழ் அரசியல் பிரதிநிதிகளை சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். இதன்போது அமெரிக்காவின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியிருக்கின்றார். அதாவது, ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசி விடயங்களை படிப்படியாக பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள். நாடு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்றது. இந்த நெருக்கடி என்பது அனைவருக்குமான நெருக்கடியாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைக்கும். அதனைத் தொடர்ந்து ஏனைய நாடுகளும் உதவிகளை வழங்கும். படிப்படியாக பிரச்னைகள் நீங்கும். எனவே, பிரச்னைகளை கையாள்வது தொடர்பில் ஒரு வழிவரைபடத்தை தயாரியுங்கள். அதன் அடிப்படையில் ரணில் விக்கிரமசிங்கவோடு பேசுங்கள். காணி விடுவிப்பு மற்றும் இதர விடயங்களை படிப்படியாக தீர்ப்பதற்கு முயற்சியுங்கள். மொத்தத்தில் ரணில் விக்கிரமசிங்கவோடு இணக்கமாக செயல்படுவதன் மூலம் பிரச்னைகளை தீர்க்க முயற்சியுங்கள். இப்போது அனைத்து விடயங்களையும் முதன்மைப்படுத்தினால் மீளவும் அடிப்படைவாத சக்திகள் தலையெடுப்பர். எனவே, அவசரப்படாமல் விடயங்களை கையாளுங்கள். இதுதான் விக்டோரியா சொல்லாமல் சொல்லியிருப்பது.

சில தினங்களுக்கு முன்னர், இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சு. ஜெயசங்கர் தமிழ்த் தேசிய கட்சிகள் அனைத்தையும் ஓரணியாக சந்தித்த போதும், இவ்வாறானதொரு கருத்தையே வலியுறுத்தியிருந்தார். அவர், இந்தியாவின் தலையிடும் எல்லைக்குட்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது பற்றியும் அதனடிப்படையில் பயணிக்குமாறும் வலியுறுத்தியிருந்தார். பிராந்திய சக்தியான இந்தியாவும் படிப்படியாகப் பயணிப்பது பற்றியே பேசுகின்றது. உலகின் முதல்தர சக்தியாக நோக்கப்படும் அமெரிக்காவும் படிப்படியாகப் பயணிக்குமாறுதான் கூறுகின்றது.

இந்த இரண்டு நாடுகள்தான் இலங்கை விவகாரங்களில் தலையீடு செய்யும் பிரதான சக்திகளாகும். மேற்குலக அழுத்தங்கள் அனைத்துமே அமெரிக்க எல்லைக்கு உட்பட்டவைதான். அமெரிக்கா இல்லையென்றால் மனித உரிமைகள் சார்ந்த உலக கரிசனையே இருக்காது. மனித உரிமைகள் மீதான கரிசனையென்பது அமெரிக்க வெளிவிவகார கொள்கையின் அங்கம். அதனடிப்படையில்தான் அமெரிக்கா தொடர்ந்தும் இலங்கையின் மனித உரிமை விவகாரம் தொடர்பில் அதன் கரிசனையை வெளிப்படுத்தி வருகின்றது. அதேபோன்று, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தை வெளிப்படையாக அங்கீகரிக்கும் ஒரேயொரு நாடு இந்தியா மட்டும்தான். அதன் எல்லையாக இருப்பது, இந்திய - இலங்கை ஒப்பந்தமும், அதன் குழந்தையான 13ஆவது திருத்தச் சட்டமும்தான்.

இவற்றை மீறி நாங்கள் எங்கு செல்லப் போகின்றோம்? எதனை அடையலாமென்று எண்ணுகின்றோம்? எதனையும் எண்ணலாம். ஆனால், அடைவது எப்படி? இந்தக் கேள்விகளுக்கான பதிலற்ற வெளியில்தான், இருப்பதைப் பயன்படுத்திக் கொண்டு, முன்னேறும் வழிமுறைகள் தொடர்பில் நாம் சிந்திக்க வேண்டியிருக்கின்றது. இவைகள் நமது விருப்பங்களல்ல. ஆனால், இவற்றை நம்மால் தாண்டிச் செல்ல முடியாதென்பதே நமக்கு முன்னாலுள்ள யதார்த்தமாகும். இதனை ஆழமாக புரிந்து கொண்டிருப்பதன் விளைவாகவே 'ஈழநாடு' தொடர்ந்தும் சில விடயங்களை வலியுறுத்தி வந்திருக்கின்றது. நாம் இதுவரையில் கூறிவந்ததே நடந்திருக்கின்றது.

எனவே, இப்போதுள்ள சூழலில் எது சாத்தியமோ, அதனை கையாளுவதே அரசியல் புத்திசாலித்தனமாகும். தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளும் தமிழ் புத்திஜீவிகளும் சிவில் சமூகம் என்போரும் புத்திசாலித்தனத்தனமான வழிமுறைகள் தொடர்பில் சிந்திக்க வேண்டும். பேச்சுப் பல்லக்கு ஆனால், தம்பியோ பொடிநடையென்பது போல், கதைகளில் காலத்தை விரயம் செய்ய முயற்சிக்கக் கூடாது. கடந்த பதின்மூன்று வருடகாலம் பல கதைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் ஓர் அங்குலம்கூட நம்மால் அசைய முடியவில்லையே - ஏன்? இந்தக் கேள்விக்கான பதிலிருந்து சிந்திக்க முற்பட்டால், நமக்குக் கிடைக்கும் ஒரேயொரு நேர்மையான பதில் - இருப்பதை பயன்படுத்திக் கொண்டு முன்செல்வோம் என்பது மட்டுமே! ஒருவேளை, படிப்படியாக செல்வதைக்கூட, தென்னிலங்கை நிராகரிக்குமாயின் அதன் பின்னர் நாம் பேசலாம். ஆனால், படிப்படியாக செல்வதில் சில வருடங்களை நாம் செலவிட வேண்டும்.

# தமிழர்கள் சுதந்திர தினத்தை பகிஷ்கரிப்பது நியாயமானது

## இந்து சமயப் பேரவை

*யாழ்ப்பாணம், பெப். 02*

தமிழ் மக்களின் நியாய பூர்வமான உரிமைகள் கிடைக்கும் வரை சுதந்திர தினத்தைப் பகிஷ்கரிப்பது நியாயமானது - வரவேற்கத்தக்கது. இதற்காக அமைதிவழியில் போராடுவது அதைவிட மேலானது. தமிழ் மக்களுக்கு அனைத்து உரிமைகளையும் வழங்குவது தெய்வநீதி அதைச் செய்யாது விடுத்து தமிழ் மக்களைக் கொடுமைப்படுத்துவது எந்த வகையிலும் ஏற்க முடியாததாகிறது.

இவ்வாறு இந்து சமயப் பேரவையின் தலைவர் ஈசான சிவ சக்திகிரீவன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

இலங்கை சுதந்திரமடைந்த பின் இந்த நாட்டை ஆட்சி செய்த பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த கட்சிகள் தமிழ் மக்களைக் கிஞ்சித்தும் மதித்ததாகத் தெரியவில்லை.

தங்களின் தேவைகளுக்கு தமிழ் மக்களையும் தமிழ்த் தலைவர்களையும் ஏமாற்றி தங்கள் நிகழ்ச்சி நிரல்களை நிறைவேற்றுவதில் எல்லாம் வல்லவர்களானார்கள். முன்னொருபோது முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட பிணக்கில் சேர். பொன் இராமநாதனை ஏமாற்றி பிரித்தானிய அரசோடு பேச வைத்து தமது காரியத்தைச் சாதித்த பின்னர் அப்பெருவள்ளலின் காலையே வாரியவர்கள்.

அவரின் வழித்தோன்றல்களைப் பார்த்து தமது உரிமையைக் கேட்டதற்காகப் பாராளுமன்றில் போர் என்றால் போர் சமாதானமென்றால் சமாதனம் என்று கூறிப் போரைத் தொடக்கியவர்கள்.

போரின் உச்சக்கட்டத்தில் 1987 இல்இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு உடன்பட்டு சிலகாலம் நடைமுறைப்படத்திவிட்டு அதை நீர்த்துப் போகச் செய்தவர்கள். இதன்பின் உலகில் மாபெரிய ஜனநாயக நாடான இந்தியா மாபெரும் தலைவரையே இழக்க வேண்டியதாயிற்று.

உரிமைக்காகப் போராடும் தமிழர்களைக் கைது செய்து சிறையில் அடைக்கும் இந்தஅரசு, 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்தக் கூடாது என்று போராடுபவர்களை கைது செய்யாதிருப்பது ஏன் என்பதை ஜனாதிபதி பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

# சிங்கள தேசத்துக்கும் இனி சுதந்திர தினம் கரிநாள்தான்

## ஐங்கரநேசன் தெரிவிப்பு



*யாழ்ப்பாணம், பெப். 02*

இலங்கையை விட்டுப் பிரித்தானிய ஆட்சி நீங்கிய நாளை தென்னிலங்கை - சிங்கள தேசம் சுதந்திர நாளாகக் கொண்டாடி மகிழ, தமிழர் தேசம் அதனைக் கரிநாளாகவே தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறது. தமிழர் தேசத்தை ஒற்றையாட்சி என்ற சிறைக்குள் வலுக்கட்டாயமாக முடக்கி வைத்திருக்கும் அரசமைப்பில் இந்நாளைச் சுதந்திர நாளாகத் தமிழர்களால் ஒருபோதும் கொண்டாட இயலாது. ஆனால், 75ஆவது சுதந்திர தினத்தைக் கோலாகலமாக இலங்கை அரசாங்கம் கொண்டாடுவதற்குத் தயாராகிவரும் நிலையில் அது சிங்கள தேசத்துக்கும் இருண்ட கரிநாளாகவே அமைந்திருக்கிறது என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் சுதந்திர தினம் தொடர்பாக பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.


இலங்கைத் தீவின் பொருளாதாரம் இன்று மீண்டெழ முடியாத படுகுழிக்குள் வீழ்ந்து கிடப்பதற்குத் தென்னிலங்கை ஆட்சியாளர்கள் தமிழர் தேசத்தின் மீது தொடுத்து வந்த யுத்தமே பிரதான காரணம். இதற்கு வித்திட்டது பௌத்த, சிங்கள மேலாதிக்கத்தை நிறுவுகின்ற இலங்கையின் ஒற்றையாட்சி அரசமைப்பு முறைமையே ஆகும்.

பிரித்தானியர்களிடம் இருந்து சிங்களத் தலைமைகளிடம் ஆட்சி கைமாறிய நாளில் இருந்து ஒற்றையாட்சி முறைமையின்கீழ் தமிழர் தேசம் தொடர்ந்து அடக்கி ஒடுக்கப்பட்டதன் விளைவாகவே தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்தத் தலைப்பட்டனர். போரின் தாங்கொணாக் கடன் சுமையை தமிழ் மக்களுடன் சேர்ந்து சிங்கள மக்களும் சுமந்து நிற்கின்றனர்.

தென்னிலங்கை அரசியல் தலைமைகள் இது குறித்து அக்கறை கொள்ளவில்லை. மாறாக, தொடர்ந்தும் தமிழர் தேசத்தை அடக்கி ஒடுக்குவதில் மட்டுமே குறியாக இருக்கின்றன. தமிழர் தனியானதொரு தேசம் என்று இலங்கையின் அரசமைப்பு அங்கீகரிக்காத வரை தமிழர்களுக்குச் சுதந்திரதினம் கரிநாளாகவே இருக்கும். தமிழர்களுக்கு விடிவு கிடைக்காத வரைக்கும் சிங்களதேசமும் இருண்டதாகவே இருக்கும் என்ற நிதர்சனத்தைச் சிங்கள மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் - என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பெப்ரவரி - 02 வியாழக்கிழமை
சுபகிருது வருடம் - தை 19
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 1.30 - 03.00
திதி : துவாதசி




**மேடம்**
குடும்பத்தினர் விருப்பத்தை திறைவேற்றுவீர்கள். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். புதிய நட்புகளால் அனுகூலம் அடைவீர்கள். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். பண வரவு உண்டு.

**இடபம்**
செயலில் தடுமாற்றம் உண்டாகும் என்றாலும், சமாளித்து முயற்சியில் வெற்றி அடைவீர்கள். உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள புதிய வழிமுறைகளைக் கையாள்வீர்கள்.

**மிதுனம்**
செலவுகள் ஒரு பக்கம் அதிகரித்தாலும், மறு பக்கம் உங்கள் தேவைகள் நிறைவேறும். திடீர் செலவுகளை சந்திக்க வேண்டிவரும் என்பதால் கவனமுடன் செயல்படுங்கள்.

**கடகம்**
நீண்டநாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். எதிர்பார்த்த ஆதாயம் உண்டாகும். வெளி வட்டாரத்தில் உங்களின் மதிப்பு அதிகரிக்கும். விஐபிகளின் ஆதரவால் முயற்சி நிறைவேறும்.

**சிம்மம்**
வியாபாரத்தில் ஏற்பட்ட பிரச்னைகள் விலகும். லாபம் அதிகரிக்கும். விருப்பம் நிறைவேறும்.எதிர்பார்த்த வரவு வந்து சேரும். இழுபறியாக இருந்த வேலைகள் நிறைவேறும்.

**கன்னி**
திட்டமிட்டிருந்த வேலைகள் நடந்தேறும். குடும்பத்தில் குழப்பம் தோன்றி சங்கடப்படுத்தும். நீங்கள் ஈடுபடும் வேலையில் தடைகள் உண்டானாலும், இறுதியில் முயற்சி வெற்றியாகும்.

**துலாம்**
சட்டத்திற்கு புறம்பான செயல்களால் சங்கடத்தை அடைவீர்கள். கவனம் தேவை. யோசிக்காமல் எந்தவொரு செயலிலும் ஈடுபட வேண்டாம். உங்கள் முயற்சிகள் இழுபறியாகும்.

**விருட்சிகம்**
எதிர்பாராத இடத்தில் இருந்து வரவு வரும். இன்று மாலை வரை உங்கள் முயற்சி லாபம் தரும். குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். செயல்களில் கவனம் தேவை.

**தனுசு**
நீங்கள் நினைத்ததை துணிச்சலுடன் செய்து முடிப்பீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும். எதிரிகள் விலகிச் செல்வார்கள். திட்டமிட்டு செயல்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

**மகரம்**
உழைப்பு அதிகரிக்கும். குழந்தைகளால் சில சங்கடங்களை அடைவீர்கள். சொத்துகளில் இருந்த பிரச்னைகள் மீண்டும் தலை எடுக்கும். உறவினரால் சங்கடம் அதிகரிக்கும்.

**கும்பம்**
தாய்வழி உறவுகளின் ஆதரவால் எண்ணம் நிறைவேறும். கவனமுடன் செயல்பட வேண்டிய நாள். கடுமையான முயற்சிக்குப்பின் உங்கள் செயல் லாபமாகும். எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும்.

**மீனம்**
நீண்டநாள் பிரச்னை ஒன்று முடிவிற்கு வரும். செயல்களில் வெற்றி காண்பீர்கள். நினைத்ததை சாதிப்பீர்கள். சகோதரர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். உங்கள் ஆற்றல் வெளிப்படும்.

# ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் அ. தி. மு. க வேட்பாளர் அறிவிப்பு

ஈரோடு, பெப். 02

ஈரோட்டில் இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்த கே. எஸ். தென்னரசு ஈரோடு கிழக்கு தொகுதி அ. தி. மு. க. வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

ஈரோடு கிழக்கு தொகுதிக்கு வரும் பெப்ரவரி 27 ஆம் திகதி இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது. தி. மு. க. கூட்டணியில் காங்கிரஸ் கட்சி போட்டியிடுகிறது.

வேட்பாளராக ஈ. வி. கே. எஸ். இளங்கோவன் போட்டியிடுகிறார். அ. ம. மு. க. சார்பில் சிவபிரசாத், தே. மு. தி. க. சார்பில் ஆனந்த், நாம் தமிழர் சார்பில் மேனகா ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

அ. தி. மு. க. வேட்பாளர்



அறிவிப்பை அரசியல் கட்சிகள் எதிர்பார்த்திருந்த நிலையில் நேற்று புதன்கிழமை காலை அ. தி. மு. க. வேட்பாளர் அறிவிக்கப்பட்டார்.

ஈரோடு கிழக்கு தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே. எஸ். தென்னரசு போட்டியிடுவார் என அ. தி. மு. க. இடைக்கால பொதுச் செயலாளர் எடப்பாடி பழனி சாமி அறிவித்துள்ளார்.

கே. எஸ். தென்னரசு பிரிக்கப்படாமல் ஒரே தொகுதியாக இருந்த ஈரோடு தொகுதியில் 2001 தேர்தல், ஈரோடு கிழக்கு, ஈரோடு மேற்கு என இரு தொகுதிதளாக பிரிக்கப்பட்ட பிறகு ஈரோடு கிழக்கு தொகுதியில் 2016 தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்று இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்துள்ளார்.

இதனால் காங்கிரஸ் வேட்பாளர் ஈ. வி. கே. எஸ். இளங்கோவனுக்கு கடும் போட்டியாக இருப்பார் என அ. தி. மு. கவினர் தெரிவித்தனர்.

(ஐ)

# மதுரை எய்ம்ஸுக்கு நிதி இல்லை தமிழக எம். பிக்கள் போராட்டம்!

சென்னை, பெப். 02

மத்திய அரசின் வரவு - செலவு திட்டத்தில் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு நிதி ஒதுக்காததை கண்டித்து தமிழக எம். பிக்கள் பாராளுமன்ற வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழகத்தில் எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும் என்ற அறிவிப்பு கடந்த 2015ஆம் ஆண்டு பெப்ரவரியில் வெளியானது. அதைத் தொடர்ந்து மதுரை தோப்பூரில் அதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு, கடந்த 2019 ஆம் ஆண்டு பிரதமர் மோடியால் அடிக்கல் நாட்டப்பட்டது.

எய்ம்ஸ் மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டப்பட்டு நான்கு ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், கட்டுமானப் பணிகளுக்கு தேவையான நிதிகளை ஒதுக்குவதில் தாமதம் நீடித்து வருகின்றது.

இந்நிலையில், நேற்று தாக்கல் செய்யப்பட்ட நடப்பாண்டு வரவு - செலவு திட்டத்திலும் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமான பணிகளுக்கான நிதி ஒதுக்கவில்லை.

இதனை கண்டித்து பாராளுமன்ற வளாகத்தில் உள்ள காந்தி சிலையின் முன்பு தமிழக எம். பிக்கள் சு.வெங்கடேசன், கார்த்தி சிதம்பரம், மாணிக்கம் தாகூர், விஜய் வசந்த், பி.ஆர். நடராஜன் உள்ளிட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(ஐ)

# அ. தி. மு. க. கூட்டணி பெயர் மாற்றம்! பா. ஜ. க. தலைவர்கள் படமும் இல்லை!

ஈரோடு, பெப். 02

பதாகையில் பிரதமர் மோடி உள்பட பா. ஜ. க. தலைவர்கள் படம் இல்லாமல் தேசிய ஜனநாயக முற்போக்கு கூட்டணி என்ற பெயரில் தேர்தல் பணிமனையை அ. தி. மு. க. திறந்துள்ளது.

ஈரோடு கிழக்கு இடைத் தேர்தலில் எடப்பாடி பழனி சாமி, ஓ. பன்னீர்செல்வம் ஆகியோரில் யாருக்கு ஆதரவு என தெரிவிக்காமல் பா. ஜ. க. காலம் தாழ்த்தி வருகிறது. இந்நிலையில், தேசிய ஜனநாயக முற்போக்கு கூட்டணி என்ற பெயரில் தேர்தல் பணிமனையை அ. தி. மு. க. திறந்துள்ளது.

காங்கிரஸ் சட்டமன்ற திருமகன் ஈவெரா மறைவால் ஈரோடு கிழக்குத் தொகுதிக்கு வரும் 27 ஆம் திகதி இடைத் தேர்தல் நடைபெறவுள்ளது.

இதில், அ. தி. மு. க. சார்பாக தென்னரசு போட்டியிடுகிறார்.

இந்நிலையில், தேர்தல் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள பதாகையில் அ. தி. மு. க. தலைமையிலான தேசிய ஜனநாயக முற்போக்கு கூட்டணி என உள்ளது. பா. ஜ. க. முடிவை அறிவிக்காத நிலையில் தேசிய ஜனநாயக கூட்டணி என்ற பெயரை பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. இதனால் தேசிய ஜனநாயக முற்போக்கு கூட்டணி என்ற பெயரில் தேர்தல் பணிமனையை அ. தி. மு. க. திறந்துள்ளது.

இந்த பதாகையில் பா. ஜ. க. தலைவர்களின் படங்கள் இடம்பெறவில்லை. எனினும், பாஜக முடிவை பொறுத்து பதாகையை மாற்றுவது குறித்து முடிவு செய்யப்படும் என அந்தக் கட்சியின் மூத்த நிர்வாகிகள் தெரிவித்தனர். (ஐ)

# 25 வருடத்துக்கான அச்சாணியாக வரவு - செலவு திட்டம் இருக்கும்!

## அண்ணாமலை தெரிவிப்பு

திருச்சி, பெப். 02

அடுத்த வரும் 25 ஆண்டுகள் அமிர்த காலமாக இருக்கும் என்று நம்முடைய பிரதமர் கூறியிருப்பதால், அந்த 25 வருடத்துக்கான அச்சாணியாக இந்த பட்ஜெட் இருக்கும்” என்று பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

திருச்சி விமான நிலையத்தில் பாஜக தலைவர் அண்ணாமலை நேற்று புதன்கிழமை செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியது:

”இந்த பட்ஜெட் வரும் என்பதற்கு, நேற்று கொடுக்கப்பட்ட பொருளாதார புள்ளிவிவர அறிக்கையின் ஆவணமே அளவீடாக இருக்கிறது. இந்த பட்ஜெட் உரையை ஆரம்பிக்கும்



போது மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன், அடுத்த வரும் 25 ஆண்டுகள் அமிர்த காலமாக இருக்கும் என்று நம்முடைய பிரதமர் கூறியிருக் கிறார் என்று தெரிவித்தார்கள். அந்த 25 வருடத் துக்கான அச்சாணியாக இந்த பட்ஜெட் இருக்கும்.

அதில் குறிப்பாக உள்கட்டமைப்புக்காக மத்திய அரசு ரூ.10 இலட்சம் கோடிக்கு மேலாக முதலீடு செய்யவுள்ளது. பட்ஜெட் முடிந்த பின்னர்தான் ஒவ்வொரு மாநிலத்திற்கும் எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது, தமிழகத்துக்கு எவ்வளவு நிதி வரும் என்பது தெரியும் - என்றார்.

# ஈழத்தமிழர்களுக்கு வழங்கப்படும் சுதந்திரம் இந்தியாவின் பாதுகாப்புக்கும் அத்திவாரம்!

## புதுடில்லி மாநாட்டில் ஜனநாயக போராளிகள் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 02

ஈழத்தமிழர்களுக்கான சுதந்திரம் மற்றும் அவர்களின் உரிமைகள் வழங்கப்படுகின்ற போதுதான் இந்திய அரசாங்கத்துக்கு வேண்டாத அந்நிய சக்திகளின் ஆக்கிரமிப்பு தடுக்கப்படும். அதுதான் இந்தியாவின் பாதுகாப்புக்கும் அத்திவாரமாய் அமையும் என ஜனநாயகப் பேராளிகள் கட்சியின் செயலாளர் இ.கதிர் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் புதுடில்லியில் இடம்பெற்ற தமிழர்களுக்கான சமூக நல அறக்கட்டளையின் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒரு அடிப்படைத் தீர்வுமின்றி நிரந்தரத் தீர்வுமின்றி அவல நிலைக்குள் வாழ்ந்துகொண்டிருக்கும் எமது ஈழத் தமிழினம் 70 ஆண்டு காலமாக தங்களது உரிமைக்காக ஆயுத ரீதியாகவும், அகிம்சை ரீதியாகவும் போராடுகின்ற இனமாகவே இலங்கையில் வாழ்ந்து வருகின்றது.

எமது மக்கள் உரிமை சார்ந்த போராட்டங்கள் ஆயுத ரீதியாக முன்னெடுக்கப்பட்ட போது எமது மக்கள் தாயகத்தில் பலம் மிக்க ஒரு சக்தியாக இருந்தார்கள்.

இலங்கைத் தீவைப் பொறுத்தவரை 65 சதவீதம் கடற்பரப்பையும் கடல் சார்ந்த நிலத்தையும் கொண்ட தாயகம் எமது கட்டுப்பாட்டில் நிழல் அரசாங்கம் போன்று இருந்தது. அந்தக் காலத்தில் தெற்காசியப் பிராந்தியத்தில் மிக முக்கியமான பகுதியாகிய எமது தாயகப் பகுதி தமிழர்கள் வசம் பாதுகாப்பு அரணாக இருந்தது. அது தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாது இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவின் பாதுகாப்புக்கும் ஒரு இரும்புச் சுவராகவே இருந்தது.

ஆயுதப் போராட்டம் திட்டமிட்டு அழிக்கப்பட்ட பின்னர் நாங்கள் எமது பலத்தை எமது தாயக மண்ணில் இழந்து நிற்கின்றோம். உண்மையாக இலங்கை அரசாங்கம் காலம் காலமாக இந்திய அரசாங்கத்தை மிக இலகுவாக ஏமாற்றி வருகின்றது. இதனை இந்தியா நன்கு உணரவேண்டும். இலங்




கைத் தமிழர்களுக்கு தீர்வு கிடைத்துவிட்டால் இந்தியாவின் மாநிலங்கள் மேலும் பிரிக்கப்பட்டு விடும் என்ற ஒரு பொய்யான செய்தியை இலங்கையின் கொள்கை வகுப்பாளர்கள் இந்தியாவின் கொள்கை வகுப்பாளர்களுக்குப் பாடமாகப் புகட்டி வருகின்றார்கள். இந்த அடிப்படையிலே தான் தமிழர்களின் உரிமை சார்ந்த விடயத்தில் இந்தியா நீண்ட காலம் மௌனம் காத்தது.

தமிழர்களின் உரிமை சார்ந்த விடயங்கள் இந்தியாவுக்கு பாதகமாக அமையாது என்ற விடயம் ஈழப் போராட்டம் திட்டமிட்டு நசுக்கப்பட்டதன் பின்னர் வெளிப்படையாகி இலங்கையின் உண்மையான முகத்திரை கிழிக்கப்பட்டது. இன்று தமிழர்களின் வல்லாதிக்கப் பூமி வல்லரசுகளின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகும் சூழ்நிலை உருவாகியிருக்கின்றது. இது தமிழர்களுக்கு மட்டுமல்ல இந்தியாவுக்கும் மிக மிகப் பாதகமான விடயமாகவே பார்க்கப்படவேண் டும்.

ஈழத் தமிழர்களையும் இந்தியாவையும் பிரிக்கின்ற போது இலங்கை அரசாங்கம் தன்னுடைய தந்திரோபாயமான நகர்வுகளை தெற்காசியப் பரப்பில் நிறைவேற்றக்கூடிய சாத்தியமான பக்கங்கள் உருவாக்கப்பட்டன. அதில் இலங்கை அரசாங்கம் வெற்றி கண்டது. இந்திய அரசாங்கம் தோல்வி கண்டது. அந்தத் தோல்வியின் அடிப்படையில் தான் இன்று தமிழர்களின் தாயகப் பகுதியான வடக்கு-கிழக்கில் எமக்கு வேண்டாத அந்நிய சக்தி நாடுகளை களமிறக்கி இந்தியாவின் பூகோள ரீதியான பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான விடயங்களை இலங்கை அரசாங்கம் உருவாக்கி வருகின்றது.

வடக்கு - கிழக்கு தாயகப் பகுதியில் அந்நிய சக்திகள் அங்கே ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் நிச்சயமாக இந்தியாவின் தமிழ்நாடு மட்டுமல்லாத ஏனைய மாநிலங்களுக்குள்ளும் இந்த நாடுகள் உடுருவிச் சென்று எதிர்வரும் காலங்களில் இந்திய அரசாங்கத்தின் மாநிலங்களைப் பிரித்தாளும் தந்திரோபாயத்தின் வெற்றியாக அமையும். எனவே ஈழத்தமிழர்களுக்கான சுதந்திரம் மற்றும் அவர்களின் உரிமைகள் வழங்கப்படுகின்றபோதுதான் இந்திய அரசாங்கத்திற்கு வேண்டாத அந்நிய சக்திகளின் ஆக்கிரமிப்பு தடுக்கப்படும்- என்றார்.

(அ)



# யாழ். பல்கலை ஆசிரியர் சங்கம் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 02

அரசாங்கத்தின் புதிய வரி அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினரால் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக முன்றலில் நேற்று முன் தினம் புதன்கிழமை இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது "அநீதியான வரிவிதிப்பை நிறுத்து", "அரசின் ஊழலால் விழுந்தவர்களை வரி ஏறி மிதிக்கிறது", "பணத்தை எடுத்தவரிடம் கேட்பதே நீதி எங்களிடம் கேட்பது அநீதி" போன்ற பதாகைகளை ஏந்தியவாறு விரிவுரையாளர்கள் அமைதியான முறையில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# ஆன்மீக சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப். 01

நீர்வேலி அருள்மிகு கந்த சுவாமி ஆலயத்தில் நடத்தப்படும் வாராந்த சிறப்பு சொற்பொழிவு கோயிலின் சண்முக விலாச மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் தலைமை உரையை பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கம் ஆற்றுவார்.

சிறப்புச் சொற்பொழிவை சைவப்புலவர் செ. கந்த. சத்தியதாசன் "தைப்பூச நன்நாள்" என்ற தலைப்பில் ஆற்றுவார்.

(ஐ)

# வவுனியா பல்கலையில் இளைஞர்களுக்கு தலைமைத்துவ நிகழ்ச்சி திட்டம் ஆரம்பம்

வவுனியா, பெப். 02

வவுனியா பல்கலைக்கழகத்தில் இளைஞர் யுவதிகளுக்கான தலைமைத்துவத்தை மேம்படுத்தும் நோக்கோடு தலைமைத்துவ அபிவிருத்தி நிகழ்சி திட்டம் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் பங்களிப்போடு வவுனியா பல்கலைக்கழகத்தின் வியாபார கற்கைகள் பீடம் ஏற்பாடு செய்துள்ள இத் திட்டத்தில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட வதிவிட பிரதிநிதி மலினி கேர்விங், யாழ்.




மாவட்ட அரசாங்க அதிபர் அ. சிவபாலசுந்தரன், வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் தி. திரேஸ்குமார், வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ரி. மங்களேஸ்வரன் உட்பட பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் என பலரும் ஆகியோரும் கலந்துகொண்டனர். (அ)

# ஜே.வி.பியை கண்டு நாம் அஞ்சவில்லை

## ஐக்கிய மக்கள் சக்தி கூறுகிறது

கொழும்பு, பெப். 02

தேசிய மக்கள் சக்தியை கண்டு தாம் அஞ்சவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி தேசிய அமைப்பாளர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே எஸ்.எம். மரிக்கார் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 53 வருடங்களாக ஜே.வி.பி. நாட்டை நாசப்படுத்தியது என்றும் 1983 இற்கு பின்னர் பிறந்தவர்களுக்கு அவர்கள் செய்த நாச வேலைகள் தெரியாது.

எதிர்வரும் தேர்தல்களில் பெரிய வெற்றியைப் பெறுவார்கள் என ஜே.வி.பி.யினர் கூறினாலும் தம்மை பிடிக்க, வாக்காளர் எண்ணிக்கையை 8 மடங்கு அதிகரிக்க வேண்டும்.

1971 ஆம் ஆண்டு கிளர்ச்சி மூலம் நாட்டை அழித்த ஜே.வி.பி., அன்றிலிருந்து தொடர்ந்து நாட்டில் நாச வேலைகளை மேற்கொண்டு வருகிறது.

எவ்வாறாயினும் அவர்கள்



பொருளாதாரம், விவசாயம், கல்வி மற்றும் ஏனைய துறைகளை அபிவிருத்தி செய்வதற்கான தமது திட்டங்களை வெளிப்படுத்தவேண்டும்- என்றார். (அ)

# ‘13’ஐ முழுமையாக அமுலாக்க விமலின் கட்சி போர்க்கொடி!

## உயிரை கொடுத்தாவது தோற்கடிக்க திட்டம்

கொழும்பு, பெப். 02

13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சியை எதிர்ப்பதாக விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி அறிவித்துள்ளது.

தேசபக்தியுள்ள மக்கள், தங்கள் உயிரைக் கொடுத்தாவது இதுபோன்ற திட்டங்களைத் தோற்கடிக்கத் தயாராக உள்ளனர் என்றும் தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

ஒற்றையாட்சி அந்தஸ்தை இல்லாதொழிக்கும் ஜனாதிபதியின் இத்தகைய நடவடிக்கைக்கு எதிராக பிரசாரத்தை மேற்கொள்ளவுள்ளதாகவும் அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

இதேவேளை 13ஆவது திருத்தம் தொடர்பான தமது நிலைப்பாட்டை வெளியிடுமாறு, பிரதமர் தினேஷ் குணவர்த்தன மற்றும் மகிந்த ராஜபக்‌ஷவிடம் தேசிய சுதந்திர முன்னணி கேட்டுக்கொண்டுள்ளது.

(அ)



# கிளிநொச்சி மதுபான விடுதிக்கு எதிராக ஒருவர் உண்ணாவிரதம்

கிளிநொச்சி, பெப். 02

கிளிநொச்சி, அக்கராயன் மேற்கில் மதுபான விற்பனை நிலையத்துடன் கூடிய ஹோட்டல் திறப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து, பிரதேசவாசியொருவர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

அக்கராயன் மேற்கு பிரதேசத்தில் உணவு, மதுபான விற்பனை வசதிகளை கொண்ட ஹொட்டல் திறப்பதற்கு அந்த பகுதி பொது அமைப்புக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. கிளிநொச்சி மாவட்ட செயலாளர், கரைச்சி பிரதேச செயலாளர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருக்கும் எழுத்து மூலமாக தமது எதிர்ப்பை கையளித்துள்ளனர்.

கடந்த 29ஆம் திகதி ஆரோக்கியபுரம் கிராமத்தில் ஒன்றுகூடிய பொது அமைப்புக்கள், அந்த ஹோட்டலை திறக்கக்கூடாது என தீர்மானம் நிறைவேற்றியிருந்தனர்.

இந்த நிலையில், பிரதேசவாசியான முருகையா இராசலிங்கம் என்பவர் நேற்று முன்தினம் மதியம் 12 மணியளவில் உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்தார்.

மக்கள் செறிந்து வாழும் தமது பகுதியில் மதுபான விற்பனை நிலையம் வேண்டாம் என அவர் தெரிவித்துள்ளார். (அ)

# இந்திய வரவு - செலவுத் திட்டத்தில் இலங்கைக்கு குறைந்தளவான நிதி

கொழும்பு, பெப். 02

இந்திய மத்திய அரசின் 2023 -2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் இலங்கைக்கு கடந்த ஆண்டை விட குறைந்தளவிலான நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது.

வரவு - செலவுத் திட்டத்தில் பூட்டான், மாலைதீவுகளுக்கான ஒதுக்கீடுகள் அதிகரித்த போதும் இலங்கைக்கு 150 கோடி இந்திய ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனை தவிர நேபாளம், மியன்மார், மொங்கோலியா, மொரிஷியஸ், சீஷெல்ஸ் ஆகிய நாடுகளுக்கு இவ்வாறு குறைந்தளவில் ஒதுக்கப்பட்டுள ளது.

இதேவேளை, தலிபான் ஆப்கானிஸ்தானை கைப்பற்றியதில் இருந்து தொடர்ச்சியாக 2ஆவது தடவையாக 200 கோடி இந்திய ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(அ)

# மீண்டும் மின்வெட்டு?

கொழும்பு, பெப். 02

நேற்று முதல் மின்சார உற்பத்திக்காக மேலதிக நீரை வெளியிடுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என நீர் முகாமைத்துவ செயலகம் தெரிவித்துள்ளது.

நீர் மின் உற்பத்தி நிலையங்களுடன் தொடர்புடைய நீர்த்தேக்கங்களில் அண்மைய நாட்களாக போதிய மழை பெய்யாமையே இதற்குக் காரணம் என மகாவலி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் நிலாந்த தனபால தெரிவித்தார்.

மின் உற்பத்திக்கு கூடுதல் தண்ணீர் வழங்க நீர் முகாமைத்து செயலகம் உடன்பட்டதால், கடந்த இரண்டு நாட்களாக மின்வெட்டு ஏற்படவில்லை.

எவ்வாறாயினும், வளிமண்டலவியல் திணைக்களத்தின் எதிர்வு கூறலுக்கு அமைய, நீர் மின் நிலையங்களுடன் தொடர்புடைய நீர்த்தேக்கங்களில் போதியளவு மழைவீழ்ச்சி கிடைக்கவில்லையென மகாவலி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் நிலந்த தனபால கூறினார்.

மேலதிக நீர் கிடைக்காவிட்டால் நேற்று முதல் மீண்டும் மின்வெட்டை ஆரம்பிக்க நேரிடும் என மின்சார சபை யின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# புதிய உயர் அதிகாரிகள் இருவர் வடக்கு மாகாணத்தில் பதவியேற்பு

யாழ்ப்பாணம், பெப். 02

வடமாகாண பிரதிப் பிரதம செயலாளராக திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் நேற்று தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

வடமாகாண மனிதவள முகாமைத்துவம் மற்றும் பயிற்சிநெறி பிரதிப் பிரதம செயலாளராக வடக்கு மாகாண ஆளுநரால் அவருக்கு நியமனக் கடிதம் வழங்கப்பட்டது.

திருமதி சுகுணரதி தெய்வேந்திரன் யாழ்.பிரதேச செயலாளராக, யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக, இந்து கலாசார அமைச்சின் செயலாளராக பின்னர் பொதுநிர்வாக உள்நாட்டவர்கள் அமைச்சில் சிரேஷ்ட நிலை அதிகாரியாக கடமையாற்றிய நிலையில் வடமாகாண சபைக்கு மாற்றம் பெற்று வந்தார்.

இந்நிலையில் வடக்கு மாகாண மனிதவள முகாமைத்துவ பயிற்சிநெறியின் பிரதிப் பிரதம செயலாளராக கடமையாற்றிய உமா மகேஸ்வரன் வடக்கு மாகாண கல்வி நிர்வாக பண்பாட்டு அலுவல்கள் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளராக மாற்றப்பட்ட நிலையில் குறித்த வெற்றிடத்திற்கு சுகுணரதி தெய்வேந்திரம் நியமிக்கப்பட்டார்.

இதேவேளை, வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளராக அ.உமா மகேஷ்வரன் நேற்று தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

மத்திய அமைச்சின் இந்து கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளராக கடமையாற்றிய உமா மகேஸ்வரன் கடந்த மாதம் வடமாகாண சபையின் மனிதவள முகாமைத்துவ மற்றும் பயிற்சி நெறியின் பிரதம செயலாளராக நியமிக்கப்பட்ட நிலையில் தற்போது கல்வி அமைச்சின் செயலாளராக பதவி மாற்றம் பெற்றுள்ளார். (அ)

# விசேட தேவையுடையோர் வக்களிக்க சிறப்பு ஏற்பாடு

கொழும்பு, பெப். 02

முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ பார்வைக் குறைபாடு உள்ள வாக்காளர்கள் அல்லது உடல் ஊனமுற்ற வாக்காளர்கள் உள்ளூராட்சித் தேர்தலில் வாக்குச் சாவடிக்கு உதவியாளர் ஒருவருடன் சென்று வாக்களிப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உடல் ஊனம் காரணமாக நடந்து அல்லது பொது போக்குவரத்து மூலம் வாக்குச் சாவடிக்கு செல்லவோ அல்லது வரவோ முடியாவிட்டால், சிறப்பு போக்குவரத்து வசதிக்கான விண்ணப்பம் தொடர்பான அறிவிப்பையும் தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது. (அ)

# ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு

கொழும்பு, பெப். 02

வருடமொன்றில் முதல் தடவையாக 2022 ஆம் ஆண்டில் நாட்டின் ஏற்றுமதி வருமானம் 13.1 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடந்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இது 2021 இல் பதிவு செய்யப்பட்ட அளவை விட 4.9 வீதம் அதிகமாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, 2022ஆம் ஆண்டு மொத்த இறக்குமதி செலவு 18,291 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும் என மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இது 11.4% சதவீத வீழ்ச்சியாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# கடவுச்சீட்டு பெற்றுத் தருவதாக கூறி பணமோசடியில் ஈடுபட்ட 2 பேர் கைது

கொழும்பு, பெப். 02

கடவுச்சீட்டு தயாரித்து தருவதாக கூறி பணமோசடியில் ஈடுபட்ட இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு நாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டு தயாரித்து தேசிய அடையாள அட்டைகள் மற்றும் ஆவணங்கள் பெற்று குறித்த பண மோசடி இடம்பெற்றுள்ளது.

தலங்கம பொலிஸாருக்கு கிடைத்த 3 முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதன்படி நேற்று முன்தினம் சந்தேகநபர்கள் தலங்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 47 மற்றும் 65 வயதுடைய மாலம்பே மற்றும் கொழும்பு 9 ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள். (அ)

# மானிப்பாயில் லொறியை திருடிச்சென்ற ஒருவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 02

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடுவில் பகுதியில் லொறி சாரதியை அச்சுறுத்தி, லொறியை திருடிச் சென்றதாகக் கூறப்படும் சம்பவத்தோடு தொடர்புடைய நபரொருவரை பொலிஸார் கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

லொறிச் சாரதி லொறியை நிறுத்தி தொலைபேசி அழைப்பை மேற்கொள்ளும் போது அவ்விடத்துக்கு மோட்டார் சைக்கிளில் வந்த சிலர் சாரதியை பயமுறுத்தி அதனை பறித்துச் சென்றதாக பொலிஸார் கூறினர்.

இது தொடர்பான முறைப்பாட்டின் பேரில் திருடப்பட்ட லொறியை பொலிஸார் கண்டுபிடித்துள்ளதோடு, சந்தேக நபர் ஒருவரை மானிப்பாய் பொலிஸ் நிலைய அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் 33 வயதுடைய ஆனைக்கோட்டைப் பிரதேசத்தை சேர்ந்தவர். இவர் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார். (அ)

# நேபாள வெளியுறவு அமைச்சர் இன்று இலங்கைக்கு வருகிறார்

கொழும்பு, பெப். 02

நேபாள வெளிவிவகார அமைச்சர் பிமலா ராய் பௌத்யால் நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு இன்று வியாழக்கிழமை இலங்கை வருகிறார்.

கொழும்பில் நடைபெறும் நாட்டின் 75 ஆவது சுதந்திர தின விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்பதற்காக வெளிவிவகார அமைச்சர் பிமலா ராய் பௌத்யால் இலங்கை வருகிறார்.

இலங்கை வெளியுறவு அமைச்சர் அலி சப்ரியின் அழைப்பின் பேரில் அவர் இந்த விஜயத்தை மேற்கொள்கிறார். (அ)

# 2 வருடங்களுக்கு ரணிலே ஜனாதிபதி

## கூறுகின்றார் அகில விராஜ்



கொழும்பு, பெப். 02

உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் எவ்வாறாயினும் அடுத்த இரண்டு வருடங்களுக்கு ரணில் விக்கிரமசிங்கவே ஜனாதிபதியாக இருப்பார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களுடன் சிறிகொத்த தலைமையகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறி னார். அவர் மேலும் தெரிவிக் கையில் -

தற்போது நிலவும் பொருளாதார பிரச்னைகளை தீர்த்து ஒரு வருடத்திற்குள் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினால் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன.

அதன் பின்னர் பத்து அல்லது இருபது வருடங்கள் ஆனாலும் ஜனாதிபதியாக செயற் படுவதற்கு ரணில் விக்ரமசிங்கவே வல்லமையுடையவர் - என்றார். (அ)

# இந்திய வெளியுறவு அமைச்சரை சந்தித்தார் மிலிந்த மொரகொட



புதுடில்லி, பெப். 02

இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொரகொட இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கரை நேற்று முன் தினம் புதுடில்லியில் உள்ள வெளிவிவகார அமைச்சில் சந்தித்துள்ளார்.

இதன்போது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகளின் தற்போதைய நிலை தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் மற்றும் இலங்கை உயர்ஸ்தானிகர் ஆகியோர், ஜெய்சங்கரின் அண்மைய இலங்கை பயணத்தின் பின் தொடர்தல் நடவடிக்கைகள் குறித்தும் விவாதித்துள்ளனர்.

குறிப்பாக, இந்த சந்திப்பின்போது சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனுதவிகளை பெற்றுக்கொள்வதற்கு இலங்கை முயற்சித்து வரும் பின்னணியில், இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையிலான இரு தரப்பு ஒத்துழைப்புக்கள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக தூதுவர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சின் இணைச் செயலாளர் புனித் அகர்வால் மற்றும் இலங்கை பிரதி தூதுவர் நிலுக கதுருகமுவ ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர். (அ)

# நுகர்வோர் அதிகார சபை சோதனைகளால் 2022ஆம் ஆண்டு ரூ.111 மில்லியன் அபராதம்

கொழும்பு, பெப். 02

2022ஆம் ஆண்டு வியாபார நிலையங்களில் நுகர்வோர் அதிகார சபை முன்னெடுத்த சோதனை நடவடிக்கைகளுக்கு அமைய தொடரப்பட்ட வழக்குகளில் 111 மில்லியன் ரூபா அபாராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு 13 ஆயிரத்து 980 சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதில் 13,389 வழக்குகள் நிறைவடைந்துள்ளதுடன் அதனூடாக இந்த அபராத தொகை கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிஸ்கட், மருந்துகள், குழந்தைகளுக்கு பயன்படுத்தும் உபகரணங்கள் மற்றும் மின்சார உபகரணங்கள் உள்ளிட்டவை தொடர்பில் கடந்த ஆண்டு சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டன.

2005ஆம் ஆண்டு முதல் இதுவரையில் நுகர்வோர் அதிகார சபை சுமார் 90 ஆயிரம் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சுயாதீன ஆணைக்குழு உறுப்பினர்களை நியமிப்பதற்கான விண்ணப்பம் கோரல்

கொழும்பு, பெப். 02

சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் நேற்று முதல் எதிர்வரும் 15ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

- தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு
- இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
- நீதிச்சேவை ஆணைக்குழு
- தேசிய பொலிஸ் ஆணைக் குழு
- இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு
- தேசிய கொள்வனவு ஆணைக்குழு
- தேசிய கணக்காய்வு ஆணைக்குழு
- பொதுச்சேவை ஆணைக் குழு

உள்ளிட்ட ஆணைக் குழுக்களுக்கு புதிய உறுப்பினர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாக அரசியலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

21ஆவது அரசியலமைப்பு திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் சுயாதீன ஆணைக் குழுக்களின் பதவிக்காலம் நிறைவடைந்தது. (அ)

# வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் கோருவது சட்டவிரோதமானது



கொழும்பு, பெப். 02

தேர்தல் காலத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் கோருவது சட்டவிரோதமானது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கொழும்பில் தெரிவித்துள்ளார்.

முஜிபுர் ரஹ்மான் உள்ளிட்ட ஏனைய வேட்பாளர்களுடன் மதத் தலைவர்களிடமும் ஆசி பெற்று தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்துவைத்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். ஏனைய ஆணைக் குழுக்களுக்கு இவ்வாறான விண்ணப்பங்கள் கோரப்பட்டாலும், தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு அழைப்பு விடுப்பதை அங்கீ கரிக்க முடியாது என அவர் குறிப்பிட்டார். (அ)

# மாணவர்களின் எதிர்ப்பு பேரணி மீது பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகம்

கொழும்பு, பெப். 02

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் எதிர்ப்பு பேரணியை கலைப் பதற்கு பொலிஸார் நேற்று நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டனர்.

களனி பல்கலைக்கழகத்திற்கு அருகிலிருந்து இந்த எதிர்ப்புப் பேரணி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே தடுத்து வைக்கப்பட்டிருந்தமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், இந்த எதிர்ப்பு பேரணி முன்னெடுக்கப்பட்டிருந்தது. (அ)

# 2 பெண்களின் சடலங்கள் மீட்பு

கொழும்பு, பெப். 02

எல்பிட்டிய பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மர்மமான முறையில் உயிரிழந்த இரு பெண்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

எல்பிட்டிய பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் இந்த சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

70 வயதுக்கும் 80 வயதுக்கும் இடைப்பட்ட இரு பெண்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

மரணத்துக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் தாயும், மகனும் உயிரிழப்பு!

கொழும்பு, பெப். 02

தம்புள்ளை - குருணாகல் வீதியில் கொகரெல்ல வைத்தியசாலைக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியில் கவிழ்ந்து இ.போ.ச பஸ்ஸுடன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தாயும் மகனும் ஸ்தலத்திலேயே உயிரிழந்தனர் என கொகரெல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

மல்சிறிபுர நீரமுல்ல பிரதேசத்தை சேர்ந்த 36 வயதான ரத்நாயக்க என்பவரும் 62 வயதான தாயுமே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் வீதியில் கவிழ்ந்து கொழும்பிலிருந்து ஹொரவபத்தானை நோக்கி பயணித்த பஸ்ஸுடன் மோதியுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

# சுதந்திர தின நிகழ்வுக்காக 3,250 அதிதிகளுக்கு அழைப்பு




கொழும்பு, பெப். 02

இலங்கையின் 75 ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொள்வதற்காக 3 ஆயிரத்து 250 அதிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர். அவர்களுள் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு அதிதிகளும் அடங்குகின்றனர்.

இதில் உள்நாட்டு அரசியல் தலைவர்கள் பலர் கலந்துகொள்கின்ற போதிலும் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ மற்றும் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் கலந்துகொள்ளமாட்டார்கள் என்று அறியமுடிகின்றது.


அதிக பணம் செலவழித்து இந்த நிகழ்வை நடத்துவதே இதற்குப் பிரதான காரணம் என்று சஜித் தரப்பும் , அநுர தரப்பும் தெரிவிக்கின்றன.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் இந்த நிகழ்வில் கலந்துகொள்ள மாட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆதிவாசிகளின் தலைவர் ஊருவாரிக்கே வன்னில அத்தோவும் இந்த நிகழ்வில் கலந்து கொள்கின்றார். (அ)

# “பேனா சிலை வைத்தால், நான் வந்து உடைப்பேன்”

## கொதித்தெழுந்த சீமானின் கருத்து



கருணாநிதியின் நினைவாக அமைக்கப்படும் பேனா சிலைக்கு எதிர்ப்பு தெரிவித்து செவ்வாயன்று (31) நடந்த கருத்துக் கேட்பு கூட்டத்தில் பேசிய நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான், “சிலை வைத் தால், நான் வந்து உடைப்பேன்,” என்று கருத்துக் கேட்பு கூட்டத்தில் பேசியுள்ளார்.

தமிழ்நாட்டின் மறைந்த முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதிக்கு சென்னை மெரீனா கடற்கரையை ஒட்டி கடலுக்குள் பேனா நினைவுச் சின்னம் அமைப் பது தொடர்பாக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரி யம் நடத்தி வரும் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் ஆதரவாகவும் எதிர்ப்பாகவும் கருத்துகள் தெரிவிக்கப் பட்ட நிலையில் பெரும் மோதலும் சலசலப்பும் ஏற்பட் டது.

மு.கருணாநிதிக்கு பேனா வடிவிலான நினைவுச் சின்னத்தை சென்னை மெரீனாவில் கடலுக்கு நடுவில் நிறுவுவதற்கான தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத் தின் கருத்துக்கேட்புக் கூட்டம் கலைவாணர் அரங்கில் செவ்வாய்க்கிழமை (ஜனவரி 31) மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்றது.

கருத்துக் கேட்புக் கூட்டம் காலை 10:30 மணி அளவில் நடக்குமென அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், காலை ஒன்பது மணியிலிருந்தே பெரும் எண்ணிக்கை யிலான ஆட்கள் அங்கு திரள ஆரம்பித்தனர். தி.மு.க வினர் பெரும்பாலான அளவில் அங்கே கூடியிருந்தனர்.

மேலும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், சமூக இயக்கங்க ளைச் சேர்ந்தவர்கள், அரசியல் இயக்கங்களைச் சேர்ந்த வர்கள், மீனவர் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் உள்பட பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் இந்தக் கூட் டத்தில் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்று கருத்தைத் தெரிவிக் கப் போவதாக நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கி ணைப்பாளர் சீமான் கூறியிருந்ததால் நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்தவர்களும் வந்திருந்தனர்.

கூட்டம் துவங்கியவுடன், இந்தத் திட்டம் குறித்து வீடியோ காட்சி மூலம் விளக்கப்பட்டது. இந்தத் திட்டம் எங்கே, எப்படி அமையும், இதற்கு ஆகும் செலவு, இதன் கட்டுமானப் பணிகள் எப்படி நடை பெறும் போன்ற தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

இதற்குப் பிறகு கருத்துக் கேட்புக் கூட்டம் துவங்கி யது. இதற்கென பெயர்களைப் பதிவு செய்திருந்தவர்கள் ஒவ்வொருவராகப் பேச அழைக்கப்பட்டனர்.

முதலில் பேசிய சட்டப் பஞ்சாயத்து இயக்கத்தைச் சேர்ந்த சங்கரன் என்பவர் பேசினார். “ஏற்கெனவே மீனவ சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பல்வேறு பாதிப்பு களைச் சந்தித்து வரும் சூழலில் இத்தகைய நினைவுச் சின்னம் அமைக்கக்கூடாது. கூவம் ஆறு கடலில் கலக் கும் இடத்தில் இந்த நினைவுச் சின்னம் அமைப்பதால் அது மீன் வளத்தைப் பாதிக்கும்,” என்று கூறினார்.

அவர் இதுபோல எதிரான கருத்தைத் தெரிவித்ததும் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு வந்திருந்த தி.மு.கவினர் கூச்சலிட்டு, அவரை பேச்சை நிறுத்தும்படி கூறினர். அதேபோல, ஆம் ஆத்மி கட்சி, பா.ஜ.கவை சேர்ந்தவர் களும் இந்த நினைவுச் சின்னத்தைக் கடலுக்குள் அமைக்கக்கூடாது எனக் கூறினர்.

அப்போதும் தி.மு.கவினர் எழுந்து அவர்களைத் தொடர்ந்து பேச அனுமதிக்கக்கூடாது எனக் கூச்சலிட் டனர்.

இதற்குப் பிறகு திருமுருகன் காந்தி பேசும்போது, திராவிட இயக்க சாதனைகளை பள்ளிக்கூடத்தில் சொல்லித்தர வேண்டும். இதுபோன்ற நினைவுச் சின்னம் தேவையில்லை எனத் தெரிவித்தார்.

இதற்குப் பிறகு, சுற்றுச்சூழல் ஆர்வலர் முகிலன் பேச அழைக்கப்பட்டார். ஆனால், அவர் பேச ஆரம்பித்ததில் இருந்தே தி.மு.கவினர் தொடர்ந்து கூச்சலிட்டதால் அவர் பேசியது சரியாகக் கேட்கவில்லை. தி.மு.கவி னரை அமைதிபடுத்தும்படி, அவர் அங்கிருந்த அதிகாரிகளிடம் கூறினார். ஆனால், தொடர்ந்து கூச்சல் எழுந்த நிலையில், அவரும் தொடர்ந்து பேசினார்.

பிறகு அவரை பேச்சை முடித்துக் கொள்ளும்படி கூட்டத்தை நடத்தியவர்கள் கேட்டுக்கொண்டனர். ஆனால், அவர் பேச்சை நிறுத்த மறுத்தார். இதையடுத்து அவரது மைக் நிறுத்தப்பட்டது. இதனால், கோபம டைந்த அவர் மேடையிலேயே



அமர்ந்து தர்ணா செய்ய ஆரம்பித்தார். பிறகு அவர் காவல்துறையால் வலுக் கட்டாயமாக வெளியேற்றப்பட்டார்.

பல்வேறு மீனவ சமூகத்தைச் சேர்ந்தவர்களும் தங்களது ஆதரவையும், எதிர்ப்பையும் பதிவு செய்தனர்.

இதற்குப் பிறகு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பேசுவதற்கு அழைக்கப் பட்டார். அவர் அழைக்கப்பட்டதில் இருந்து கூட்டத் தில் அவருக்கு ஆதரவாகவும் எதிர்ப்பாகவும் கூச்சல் எழுந்தது.

“கடலில் 8551.13 சதுர மீற்றரை நீங்கள் எடுக்கிறீர் கள். அதில் பேனா வைக்க வேண்டும் என்றால், கல்லைக் கொட்ட வேண்டும், மண்ணைக் கொட்ட வேண்டும். இதனால் ஏற்படும் அழுத்தத்தால் அங்கிருக்கும் பவளப்பாறைகள் பாதிக்கப்படும்,” என்று அந்தத் திட்டத்திற்கு எதிராக கருத்தைத் தெரிவிக்க ஆரம்பித்த தும் தி.மு.கவினர் மேடைக்கு அருகில் நெருங்கி வந்து கூச்சலிட்டனர். “அதைப் பற்றி எங்களுக்குக் கவலை இல்லை” என்றனர்.

அப்போது சீமான், “உனக்கு எதைப் பற்றி அக்கறை இருந்திருக்கிறது? கடற்கரையில் புதைக்கவிட்டதே தவறு. இதில் பேனா நினைவுச் சின்னம் வேறு வைக்க வேண்டுமா?வேண்டுமென்றால் அறிவாலயத்தில் போய் வையுங்கள். நினைவிடம் கட்டியிருக்கிறீர்களே, அதில் வையுங்கள், கடலுக்குள்தான் வைப்பார்களாம்.

இந்தச் சின்னம் அமைத்தால் 13 மீனவ கிராமங்கள் பாதிக்கப்படும். சும்மா மீனவ சங்கம் என்ற பெயரில், அனைத்து மீனவ சங்கம், அகில இந்திய மீனவ சங்கம் என்ற பெயரில் இங்கு வந்துவிட்டு இதனால் ஒன்றும் பாதிப்பில்லை என்று எதையாவது பேசிக்கிட்டு. நீங்கள் பேனா வையுங்கள், ஒருநாள் நான் வந்து உடைக்கிறேன்.

பள்ளிக்கூடத்தை சீரமைக்க காசு இல்லை, பேனா வைக்க காசு எங்கிருந்து வருகிறது?” என்றபோது தி.மு. கவினர் தொடர்ந்து கூச்சலிட்டனர்.

ஆனால் தொடர்ந்து பேசிய சீமான், “நீ போகச் சொன்னால் நான் போய்விடுவேனா? நாங்கள் கடலுக் குள் பேனா வைப்பதை எதிர்க்கிறோம், எதிர்க்கிறோம், எதிர்க்கிறோம். எனவே அதைத் தடுத்து நிறுத்தும் வரை கடுமையான போராட்டம் நடத்துவோம். இது உறுதி,” என்று பேசிவிட்டு வெளியேறினார். அவருடன் நாம் தமிழர் கட்சியினரும் வெளியேறினர்.

பின்னர் வெளியில் செய்தியாளர்களைச் சந்தித்த சீமான், “கருத்துக் கேட்புக் கூட்டம் என்ற பெயரில் கூட்டத்தை நடத்தி, அவர்களுக்கு ஆதரவான கருத்து களை ஏற்பது, எதிர்க் கருத்து தெரிவித்தால், அதை எதிர்த்துக் கூச்சலிடுவது என்பது ரொம்ப அநாகரிகம்.

கருணாநிதிக்கு பேனா நினைவுச் சின்னம் வைப்பதை எதிர்க்கவில்லை, ஏற்கிறோம். ஆனால், கடலுக்குள் வைக்கக் கூடாது. அவ்வாறு வைப்பதை வன்மையாக நாங்கள் கண்டிக்கிறோம். கிட்டத்தட்ட அரை ஏக்கர் பரப்பளவை கடலில் இருந்து எடுக்கின்றனர்.

கடலுக்குள் கல்லையும் மண்ணையும் கொட்டி அதன் மேல் அந்தப் பேனாவை நிறுவ வேண்டும். எதற்காக?

நினைவு மண்டபம் கட்டுகிறீர்கள், அதற்கு முன் வையுங்கள். அறிவாலயத்தின் முன் வையுங்கள். யார் உங்களை எதிர்க்கப் போகின்றனர்?

பள்ளிக் கூடங்களைப் புனரமைக்க நிதி இல்லை எனக் கூறி நிதி திரட்டும் அரசுக்கு, இந்தப் பேனா வைக்க மட்டும் ரூ. 81 கோடி எங்கிருந்து வருகிறது?” என்றார்.

இதற்குப் பிறகு விருதுநகரைச் சேர்ந்த ஒரு பெண் செயற்பாட்டாளர் பேச வந்தார். அவர் இந்தப் பேனா நினைவுச் சின்னத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தபோது, அதற்கும் தி.மு.கவினர் கூச்சலிட்டனர்.

இதற்குப் பிறகு, பூவுலகின் நண்பர்கள் அமைப்பைச் சேர்ந்த பிரபாகரன் பேசும்போது, “கடல் மட்டம் உயர்வதால் சென்னை நகரம் அபாயத்தில் இருக்கிறது. கருணாநிதி இருந்தால் இதைச் செய்வாரா என்பதை யோசித்து இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும்” என்றார்.

இத்துடன் இந்தக் கூட்டம் முடிவுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், கருத்துகளைத் தெரிவிக்க பெயர் கொடுத்திருந்த பலரும் தங்கள் கருத்தைத் தெரிவிக்க வாய்ப்பளிக்க வேண்டும் எனக் கோரினர். இருந்தபோதும் கூட்டம் முடித்து வைக்கப்பட்டது.

சுற்றுச்சூழல் ஆர்வலரான முகிலன் இந்தக் கூட்டம் நடத்தப்பட்ட விதம் குறித்து கடும் அதிருப்தி தெரிவித் தார்.

“பல கருத்துக் கேட்புக் கூட்டங்கள் மாலை வரை நடந்திருக்கின்றன. குஜராத்தில் அடுத்த நாள் அதிகாலை வரை நடந்திருக்கிறது. இவர்கள் இப்படி முடிக்கிறார் கள். யாரையும் பேசவிடவில்லை. இது அரசுக்கு அவப்பெயரைத்தான் ஏற்படுத்தும். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தக் கூடாது” என்று தெரிவித்தார். (பிபிசி)



# இலங்கையின் அரசியல் யாப்பில் பௌத்த மதம் மற்றும் ஏனைய சிறுபான்மைச் சமூகங்கள்!

**நிஹால் அபேசிங்க**

பிரிட்டிஷ் ஆட்சிக்கு முந்தைய காலப் பிரிவின் போது நாட்டில் பொதுவாக இடம்பெற்று வந்த இனத்துவ ஒருங்கிணைப்புச் செயன்முறை காலனித்துவ ஆட்சியின் போது பெருமளவுக்குக் குறைவடைந்தது. இனத்துவ அடையாளங்கள் போஷித்து வளர்க்கப்பட்டு, வலியுறுத்தப்பட்ட நிலையில் இது நிகழ்ந்தது. ஜனரஞ்சக ஆதரவைத் திரட்டுவதற்கென பௌத்த அடையாளத்தைப் பயன்படுத்திக் கொண்ட காலனித்துவ எதிர் இயக்கமொன்றினாலேயே நவீன சிங்கள தேசியவாதம் 19ஆம் நூற்றாண்டில் எழுச்சியடைந்ததாக வாதிட முடியும். பௌத்த மதம் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வருவதாக சித்தரித்துக் காட்டப்பட்டது. முதலில் கிறிஸ்தவ மிஷனரிமாரிடமிருந்தும், பிற்காலத்தில் பிரிட்டிஷ் முதலாளித்துவ நலன்களிலிருந்தும் இந்த அச்சுறுத்தல் தோன்றுவதாகக் கருதப்பட்டது. குறிப்பாக, பெருந்தோட்ட கைத்தொழில் வடிவிலும், மதுப் பழக்கம் அதிகரித்து வருவதை உள்ளிட்ட விதத்திலான அதன் மோசமான தாக்கங்கள் என்பவற்றின் வடிவிலும் இது இடம்பெறுவதாகக் கருதப்பட்டது.

மிஷனரிகளுக்கான ஒரு சவாலாகவும், பௌத்த மதத்திற்கு "பாரம்பரிய அனுசரணையை" வழங்கும் விடயத்தில் அரசு தோல்வியடைந்திருக்கும் நிலைக்கான ஓர் எதிர்வினையாகவும் சமயம் தொடர்பான விவாதங்களில் ஈடுபட வருமாறு பௌத்த பிக்குகள் கிறிஸ்தவர்களுக்கு அறைகூவல் விடுத்தார்கள் (உதாரணம் 1862 இன் பாணந்துறை விவாதங்கள்). அநகாரிக தர்மபால போன்ற முன்னோடி சிங்கள தேசியவாதிகள் ஒரு மறுமலர்ச்சி இயக்கத்தை உருவாக்கினார்கள். பௌத்த மதம், பௌத்த சமய (தம்ம) பாடசாலைகள், ஒரு பௌத்த கொடி, ஒழுக்க நெறிக்கோவைகள், ஜனரஞ்சகமான சமய நடைமுறைகளுக்கு மாறான விதத்தில் பௌத்த மதத்தை முறையான விதத்தில் தொகுத்தல், தேரவாத பௌத்த மதத்தை முனைப்பான விதத்தில் பின்பற்ற வைத்து, சமூக மற்றும் அரசியல் செயல்பாடுகளில் பங்கேற்கும் பொருட்டு மகா சங்கத்தினருக்கு வலுவூட்டுதல் என்பவற்றை மேம்படுத்துவதற்கென இந்த இயக்கம் பிரசுரங்களை வெளியிடத் தொடங்கியது.

தொடக்க காலத்தில் முன்னெடுக்கப்பட்ட இந்த சிங்கள பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் திட்டமிட்டே தேசியவாத அரசியல் மற்றும் சமயம் என்பவற்றின் ஒரு கலவையை உருவாக்கியது. அரசு மற்றும் சமயம் என்பவற்றுக்கிடையிலான பிணைப்பு மீண்டும் எடுத்து வரப்பட வேண்டுமென அதன் தலைவர்கள் குரல் எழுப்பினார்கள். வரலாறு குறித்த அவர்களது பொருள் கோடலின் பிரகாரம், சிங்கள மக்களுக்கு வரலாற்று ரீதியான ஒரு பணி இருந்து வருகின்றது என்ற கருத்தை அவர்கள் முன்வைத்தார்கள். பௌத்த மதத்தின் ஒரு காவல் கோபுரம் என்ற முறையில் ஆக்கிரமிப்பாளர்கள், காலனித்துவவாதிகள் மற்றும் ஏனைய சமயத்தவர்கள் ஆகியோரிடமிருந்து இலங்கையை பாதுகாத்துக் கொள்ளும் கடமை சிங்கள மக்களுக்கு இருந்து

**இந்தியாவில் வாழ்ந்து வரும் கோடிக்கணக்கான தமிழர்களுக்கு மத்தியில் "சிறுபான்மை தாழ்வுச் சிக்கலுடன் கூடிய பெரும்பான்மை" என அழைக்கப்படும் ஒரு நிலைமை சிங்கள மக்கள் மத்தியில் தோன்றுவதற்கு மகாவம்சம் வழிகோலியது.**

வருகிறது எனக் கருதப்பட்டது. இந்த உலக நோக்கு ஓரளவுக்கு மகாவம்ச வரலாற்று நூலின் செல்வாக்கைக் கொண்டிருந்தது. இந்தியாவில் வாழ்ந்து வரும் கோடிக்கணக்கான தமிழர்களுக்கு மத்தியில் "சிறுபான்மை தாழ்வுச் சிக்கலுடன் கூடிய பெரும்பான்மை" என அழைக்கப்படும் ஒரு நிலைமை சிங்கள மக்கள் மத்தியில் தோன்றுவதற்கு மகாவம்சம் வழிகோலியது. தமிழர்கள் இந்தியாவில் தமிழ்நாட்டில் ஒரு தாயகத்துடன் பிணைக்கப்பட்டுள்ளார்கள் என்ற எண்ணக் கரு உருவாகியது. இந்த நிலைமை தொடர்ந்து நிலவி வந்ததுடன், இன்றும் மிகவும் பரவலான விதத்தில் அவ்வாறே நிலவி வருகின்றது. 1910ஆம் ஆண்டளவில் இலங்கையில் 400,000 க்கும் மேற்பட்ட இந்திய புலம்பெயர் தோட்டத் தொழிலாளர்கள் வாழ்ந்து வந்ததுடன், அது நாட்டின் குடித்தொகையின் - 1931, 651,000 - ஐந்தில் ஒரு பாகமாக இருந்து வந்தது. 1948 இல் சுதந்திரம்



கிடைத்த பின்னர் அரசாங்கம் மேற்கொண்ட முதலாவது பாரிய நடவடிக்கை சுமார் 800,000 இந்திய வம்சாவளி தொழிலாளர்களின் பிரஜாவுரிமை மற்றும் வாக்குரிமை என்பவற்றை பறித்தமையாகும். இதற்கு இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் ஒரு சிலரின் ஆதரவும் கிடைத்திருந்தது. சிறுபான்மை உரிமைகள் தொடர்பாக பின்னர் தாம் முன்வைக்கப் போகும் கோரிக்கைகளை அந்நிலைப்பாடு பலவீனப்படுத்தியது.

இந்தப் பின்புலத்தில், பெரும்பான்மைச் சமூகத்தினரின் மதமான பௌத்த மதத்துக்கும், ஏனைய குழுக்களுக்கும் இடையிலான இடைத் தொடர்புகளுக்கான பல்வேறு அரசியல் யாப்பு ரீதியான ஏற்பாடுகளை எடுத்து விளக்குவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

இலங்கையின் ஆட்சி முறை 1801ஆம் ஆண்டு தொடக் கம் இடம்பெற்ற பிரிட்டிஷ் காலனித்துவ செயன்முறையின் ஒரு வரலாறு என்ற முறையில் வடிவமைக்கப்பட்டிருந்தது. சட்ட சபையை உருவாக்கிய 1833ஆம் ஆண்டின் அரசியல் யாப்புக்கூடாக இலங்கையில் பிரதிநிதித்துவ அரசாங்கமொன்றை அபிவிருத்தி செய்வதற்கு பிரித்தானியர்கள் முயற்சித்தார்கள். இந்தச் சபை பெருமளவுக்கு அதிகாரமற்ற ஒரு சபையாக இருந்து வந்தது. பிரித்தானிய அரசாங்கம் அதன் கண்டனத்தை உதாசீனம் செய்த பொழுது, 1864 இல் இச்சபை ராஜினாமா செய்தது. இலங்கை மக்களை திருப்திப்படுத்துவதற்கென 1910, 1920 மற்றும் 1924 ஆகிய ஆண்டுகளில் பிரித்தானியர்கள் வேறு பல அரசியல் யாப்புகளை முன்வைக்க முயன்றார்கள். ஆனால், இந்த அரசியல் யாப்புக்கள் உள்நாட்டு மக்கள் தமது ஆட்சியை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளைக் கொண்டிருக்கவில்லை.

### 1910ஆம் ஆண்டின் ஏற்பாடுகள்

1910ஆம் ஆண்டின் குருவ் - மக்கலம் அரசியல் யாப்புச் சீர்த்திருத்தங்கள் ஒரு சில தனித்துவமான சிறப்பம்சங்களை கொண்டிருந்தன. முதல் தடவையாக சட்ட சபைக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் கோட்பாடு நாட்டில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. எவ்வாறிருப்பினும், இன ரீதியான பிரதிநிதித்துவம் கைவிடப்பட்டிருக்கவில்லை.

1910ஆம் ஆண்டு சீர்த்திருத்தங்கள் மூலம் தமக்கு வழங்கப்பட்ட பெயரளவிலான அதிகாரங்கள் குறித்து இலங்கை மக்கள் திருப்தியடையவில்லை. அதன் காரணமாக அவர்கள் 1919 இல் தேசிய காங்கிரஸ் அமைப்பை உருவாக்கியதுடன், முறையான அரசியல் யாப்புச் சீர்த்திருத்தங்கள் தொடர்பாக கோரிக்கை விடுக்கத் தொடங்கினார்கள். இதற்கான ஓர் எதிர்வினையாக 1920 இல் சட்டவாக்கச் சபை மீள உருவாக்கப்பட்டது. அதே வேளையில், அரசியல் யாப்புச் சீர்த்திருத்தங்களுக்கான கோரிக்கைகளை முன்வைத்து வந்தவர்களின் அமைப்பாக இருந்து வந்த இலங்கை தேசிய காங்கிரஸ் அமைப்பின் சார்பில் சேர் ஜேம்ஸ் பீரிஸ் தேசாதிபதி மெனிங்கிடம் யோசனைகளை சமர்ப்பித்தார்.

### டொனமூர் அரசியல் யாப்பு 1931

டொனமூர் அரசியல் சீர்த்திருத்தங்கள் சுதந்திரத்தை நோக்கிய இலங்கையின் பயணத்தில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒரு பாய்ச்சலை எடுத்துக் காட்டின. இச்சீர்த்திருத்தங்கள் 1931ஆம் ஆண்டில் அமுலுக்கு வந்தன. டொனமூர் சீர்த்திருத்தங்களின் ஒரு சில முக்கியமான அம்சங்கள் வருமாறு: பிராந்திய பிரதிநிதித்துவத்தின் விரிவாக்கம், சர்வஜன வாக்குரிமை அறிமுகம், அரசாங்க சபையின் ஸ்தாபிதம், நிறைவேற்றுக் கமிட்டி முறை மற்றும் அமைச்சரவை என்பவற்றின் உருவாக்கம், தேசாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டமை என்பன. இனத்துவ பிரதிநிதித்துவ முறையும் நீக்கப்பட்டது.

1931 - 1947 காலப் பிரிவில் செயற்பட்டு வந்த டொனமூர் அரசியல் யாப்பு இலங்கை மக்களின் அபிலாஷைகளை திருப்திப்படுத்தவில்லை. முழுப் பொறுப்பையும் கொண்டிருக்கும் ஓர் அரசாங்கம் அல்லது டொமினியன் அந்தஸ்து வேண்டும் என அவர்கள் தொடர்ந்தும் குரல் கொடுத்து வந்தார்கள். அதன் விளைவாக, 1944ஆம் ஆண்டில் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்ட சோல்பரி ஆணைக்குழு ஒரு புதிய அரசியல் யாப்பை முன்மொழிந்தது. அதன் பிரதான அம்சங்களாவன: தேசாதிபதி முறை நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக மகா தேசாதிபதி பதவி அறிமுகம் செய்து வைக்கப்பட்டமை, மக்கள் பிரதிநிதிகள் சபை மற்றும் இரண்டாவது சபை அல்லது செனட் சபை என்ற இரட்டை சட்டவாக்க அமைப்பு அறிமுகம் செய்து வைக்கப்பட்டமை, பிரதம மந்திரியை தலைவராகக் கொண்ட அமைச்சரவை நியமனம், பகிரங்க சேவை ஆணைக்குழு மற்றும் நீதிச் சேவை ஆணைக்குழு என்பன ஸ்தாபிக்கப்பட்டமை.

### சோல்பரி அரசியல் யாப்பு

சோல்பரி ஆணைக்குழுவின் 1945ஆம் ஆண்டின் அறிக்கை இலங்கைக்கான பிரிட்டிஷ் வெஸ்ட் மினிஸ்டர் நாடாளுமன்ற மாதிரியொன்றை ஆதரித்ததுடன், அந்த முடிவுக்குப் பின்னாலிருந்த ஒரு சில காரணங்களையும் எடுத்து விளக்கியிருந்தது: "இலங்கை அரசியல் தலைவர்களில் பலர் இங்கிலாந்தில் கல்வி கற்றிருப்பவர்கள் என்ற விடயத்தையும், பிரிட்டிஷ் அரசியல் கருத்துக்களை உள்வாங்கியுள்ளார்கள் என்ற விடயத்தையும் இங்கு கவனத்தில் எடுப்பது அவசியமாகும். பொறுப்புக்களுடன் கூடிய அரசாங்கம் ஒன்று தமக்குத் தேவையென அவர்கள் கோரிக்கை விடுக்கும் பொழுது பிரித்தானிய நாடாளுமன்ற மாதிரியை அடிப்படையாகக் கொண்ட அரசாங்கமொன்றையே அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். அதற்கு மாறான எந்தவொரு அரசியல் முறையையும்

**தமிழர்கள் இந்தியாவில் தமிழ்நாட்டில் ஒரு தாயகத்துடன் பிணைக்கப்பட்டுள்ளார்கள் என்ற எண்ணக் கரு உருவாகியது. இந்த நிலைமை தொடர்ந்து நிலவி வந்ததுடன், இன்றும் மிகவும் பரவலான விதத்தில் அவ்வாறே நிலவி வருகின்றது.**

'பிரித்தானிய பொதுநலவாய நாடுகளின் சக பிரஜைகள் என்ற முறையில் தமது அந்தஸ்துக்கு குறைவானது என்றும், தமக்குக் கிடைக்க வேண்டியதிலும் பார்க்க குறைவானது என்றும் கருதி அவர்கள் வெறுத்தொதுக்க முடியும். சரியான வார்த்தைகளில் சொல்வதாக இருந்தால், பிரிட்டிஷ் மக்களுக்கு எது சிறந்ததாக இருந்து வருகிறதோ இலங்கையர்களுக்கும் அதுவே சிறந்ததாக இருந்து வரும்.

### 1972 அரசியல் யாப்பு

இலங்கை 1948ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி பிரித்தானிய பொதுநலவாய நாடுகளுக்குள் சுதந்திர டொமினியன் அந்தஸ்தைப் பெற்றுக் கொண்டது. அதனை அடுத்து அதிகாரத்தைப் பெற்றுக் கொண்ட இலங்கையின் தலைவர்கள் நாட்டுக்கு ஒரு புதிய அரசியல் யாப்புக்கான தேவை இருந்து வருவதாக கருதவில்லை. 1946ஆம் ஆண்டின் சோல்பரி அரசியல் யாப்பின் மூலம் ஆளப்படுவதையே அவர்கள் விரும்பினார்கள். ஆட்சி அதிகாரத்தில் இருந்து வந்த உயர் குடியினரினால் உருவாக்கப்பட்ட முன்மொழிவுகளையே பிரதானமாக சோல்பரி அரசியல் யாப்பு அடிப்படையாகக் கொண்டிருந்தது என்ற விடயம் இதற்கான பிரதானமான காரணமாகும். அவர்கள் புதிதாக உருவாக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் கொடியின் கீழ் ஒன்றிணைந்து, நாடு சுதந்திரமடைந்த பொழுது தமது அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொண்டனர். 1948 - 1955 காலப் பிரிவின் போது ஆளும் கட்சியாக இருந்து வந்த ஐக்கிய தேசியக் கட்சி, சோல்பரி அரசியல் யாப்பின் செயல்திறன் குறித்து கேள்வி எழுப்ப வேண்டிய அவசியம் இருந்து வருவதாகக் கருதவில்லை. எவ்வாறிருப்பினும், 1955 இல் இலங்கையை ஒரு குடியரசாக மாற்றியமைக்கும் விடயம் (1948 தொடக்கம் இடதுசாரி கட்சிகள் தொடர்ச்சியாக முன்வைத்து வந்த ஒரு கோரிக்கை) தொடர்பாக கட்சியின் நாடாளுமன்றக் குழு கலந்துரையாடியது. ஆனால், அதன்போது எத்தகைய முடிவுகளும் எட்டப்படவில்லை.

(மிகுதி நாளை)

ஈழநாடு



# 13ஆம் திருத்தம் நடைமுறையானால் தமிழ் - முஸ்லிம் முரண்பாடு எழும்!

## கிழக்கு ஆளுநர் யஹம்பத்

கொழும்பு, பெப். 02

69 இலட்சம் மக்களாணையுடன் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதியால் கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டேன். சுபீட்சமான இலக்கு கொள்கைத் திட்டத்தில் 13ஆவது திருத்தம் தொடர்பில் குறிப்பிடப்படவில்லை.13 ஆவது திருத்தம் அமுல்படுத்தப்பட்டால் தமிழ், முஸ்லிம் சமூகங்களிடையே முரண்பாடுகள் தோற்றம் பெறும் என கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் தெரிவித்தார்.

மகா நாயக்க தேரர்களை சரத் வீரசேகரவுடன் இணைந்து சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கிழக்கு மாகாண ஆளுநராக கடந்த மூன்று ஆண்டு காலமாக பதவி வகிக்கிறேன்.கிழக்கு மாகாணத்தில் தமிழ்,முஸ்லிம் மற்றும் சமூகத்தினர் இனவாதம் இல்லாமல் நல்லிணக்கத்துடன் வாழ்கிறார்கள்.13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தினால் இன நல்லிணக்கத்துக்கு பாதிப்பு ஏற்படுமோ என்ற அச்சம் கிழக்கு மாகாண மக்கள் மத்தியில் காணப்படுகிறது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் ஊடாக நாட்டை பிளவுப்படுத்துமாறு கிழக்கு மாகாண மக்கள் கோரவில்லை. அரசியல்வாதிகளே நாட்டை பிளவுப்படுத்தும் முயற்சியில் மும்முரமாக செயல்படுகிறார்கள். கிழக்கு மாகாண மக்களின் அடிப்படை பிரச்னைகளுக்கு தீர்வு காண அரசியல்வாதிகள் குரல் கொடுப்பதில்லை.

30 வருட கால யுத்தத்தால் கிழக்கு மாகாணம் மிக மோசமாக பாதிக்கப்பட்டது. தேசிய பொருளாதார அபிவிருத்தி திட்டத்தில் கிழக்கு மாகாணத்துக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என கிழக்கு மாகாண மக்கள் கோருகிறார்கள். நாட்டை பிளவுபடுத்துமாறு மக்கள் கோரவில்லை.

கிழக்கு மாகாணத்தில் 40 சதவீதம் முஸ்லிம் சமூகத்தினரும், 35 சதவீதம் தமிழ் சமூகத்தினரும்,25 சதவீதம் சிங்கள சமூகத்தினரும் வாழ்கின்றனர். அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப் படுத்தப்பட்டால் தமிழ் - முஸ்லிம் சமூகத்தினருக்கு இடையில் முரண்பாடுகள் தோற்றம் பெறும்.



நாடு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள பின்னணியில் தேவையில்லாத பிரச்னைகள் தோற்றம் பெறுவது பொரு ளாதார நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தும்.13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை ஏதும் கிடையாது.

69 இலட்ச மக்களாணையுடன் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதியால் நான் கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டேன். சுபீட்சமான கொள்கை திட்டத்திற்கு அமைய செயல்படுகிறேன். அத்திட்டத்தில் 13ஆவது திருத்தம் தொடர்பில் குறிப்பிடப்படவில்லை. சுபீட்சமான கொள்கை திட்டத்தில் இருந்து நான் விலகவில்லை - மாற்றமடையவுமில்லை - என்றார். (ஐ)

# மிருசுவிலில் வாள்வெட்டு இளைஞர் ஒருவர் படுகாயம்!

தென்மராட்சி, பெப். 02

தென்மராட்சி - மிருசுவிலில் நேற்று நடந்த வாள்வெட்டு சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

உணவகம் ஒன்றில் உணவு எடுப்பதற்காக நேற்றிரவு சென்ற ஒருவரே இவ்வாறு வாள்வெட்டுக்கு இலக்காகினார்.

மதுபோதையில் நின்ற கும்பல் ஒன்றுடன் முரண்பாடு ஏற்பட்டதையடுத்து வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டது. காயமடைந்தவரும் மது போதையில் இருந்தார் என்று அறியவருகி றது.

பாலாவி, கொடிகாமத்தை சேர்ந்த 27 வயதான ஒருவரே கால் மற்றும் கையில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ஐ)

# புற்றுநோய்க்கு நாளாந்தம் 46 பேர் மரணிக்கின்றனர்

கொழும்பு, பெப். 02

நாட்டில் நாளாந்தம் கண்டறியப்படும் 105 புற்றுநோயாளர்களில் 46 பேர் புற்றுநோயால் இறக்கின்றனர் என்று தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் இஷானி பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாளை மறுநாள் உலக புற்றுநோய் தினமாகும். இதையொட்டி நேற்று சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், 2020ஆம் ஆண்டில் மொத்தம் 38 ஆயிரத்து 229 புதிய புற்றுநோயாளிகள் கண்டறியப்பட்டனர். இவர்களில் 16 ஆயிரத்து 691 பேர் இந்த நோயால் இறந்தனர்.

பெண்களுக்கு புற்றுநோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம். இதேசமயம், ஆண்களில் இறப்பு அதிகமாக இருப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டில் மொத்தம் 20 ஆயிரத்து 395 பெண்களும் 17 ஆயிரத்து 834 ஆண்களும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டனர். புற்றுநோயால் கண்டறியப்பட்ட நோயாளிகளில் 50 சதவீதம் பேர் நோய் தாக்கத்தால் உயிரிழக்கின்றனர் என்றும் அவர் கூறினார். (ஐ)

# கெஹலியவுக்கு விதித்த பயண தடை இடைநீக்கம்!

கொழும்பு, பெப். 02

சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டுப் பயணத் தடையை தற்காலிகமாக நீக்க உயர்நீதிமன்றம் உத்தவரவிட்டுள்ளது.

நாட்டுக்கு தேவையான மருந்து பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக மூன்று மாநாடுகளில் கலந்துகொள்ள வேண்டும் என்பதால் இவ்வாறு தற்காலிகமாகப் பயணத்தடை நீக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி முதல் மே 20ஆம் திகதி வரையிலான காலப் பகுதிக்குள் இவ்வாறு பயணத்தடை நீக்கப்பட்டுள்ளது.



இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்கு தேவைப்படாத சந்தர்ப்பம் ஒன்றில் 600 ஜி. ஐ. குழாய்களைக் கொள்வனவு செய்து அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பான வழக்கு விசாரணையில் கெஹலியவுக்கு வெளிநாட்டுப் பயணத் தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

**கல்வி tv CHANNEL-1**

**02.02.2023**

**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

**கல்வி tv CHANNEL - 2**

**02.02.2023**

**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# நாட்டை அழிக்க முன் கோட்டா விவசாயிகளைத்தான் அழித்தார்

## மட்டக்களப்பில் சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

அம்பாறை, பெப். 02

கோட்டபாயவின் அரசாங்கம் இந்த நாட்டை அழிப்பதற்கு முன்னதாக முதலாவது விவசாயிகளைத்தான் அழித்தார்கள் என எதிர்க்கட்சி தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் வகையிலான கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

ஐ க்கிய மக்கள் சக்தி கட்சியின் கீழ் மட்டக்களப்பு பட்டிருப்பு தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் கூட்டம் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மாலை கோவில்போரதீவில் நடைபெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் பிரதியமைச்சருமான சோ. கணேசமூர்த்தி தலைமையில் இந்த பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.



இதன்போது கருத்து தெரிவித்த சஜித் பிரேமதாஸ-

மக்கள் அதிகமான அரசியல் கட்சிகளின் வாக்குறுதிகளை கேட்டு இருப்பார்கள். ஆனால் அப்படி அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் அதிகமாக செயல்படுத்தப்பட்டு இருக்கின்றனவா என்று சிந்திக்கும்பொழுது இல்லை என்று தான் கூற முடியும்.

எதிர்காலங்களில் வருவார்கள். பொய்யான வாக்குறுதிகளை வழங்குவார்கள் நாம் சில வாக்குறுதிகளுக்கு அடிமை யாக்கி விடுவோம்.

எமது கட்சியின் மூலம் வெற்றி பெறும் உறுப்பினர்கள் எதுவித மணல் அனுமதி மற்றும் ஒப்பந்த வேலைகளினால் தரகுப் பணம் பெறும் செயற்பாடுகளில் ஈடுபடமாட்டார்கள்.

வீடமைப்பு கட்டுமானத் துறை அமைச்சராக இருந்த போது மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகமான வீடுகளை இந்த மாவட்ட மக்களுக்கு கட்டிக் கொடுத்தோம். அதிகமான குறை வீடுகளை நிவர்த்தி செய்து கொடுத்தோம். ஆனால் அன்று ஜனாதிபதி தேர்தல் ஏற்பட்டதன் மாற்றம் காரணமாக எங்களது வீடமைப்பு வேலைத் திட்டங்கள், சேவை திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டு விட்டன.

இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது நாங்கள் ஒட்டுமொத்த சபைகளையும் கைப்பற்றி நாங்கள் தற்போது காணப்படக்கூடிய அரசுக்கு ஒரு செய்தியை கூற இருக்கின்றோம்.

அதன் மூலமாக இடைநிறுத்தப்பட்ட அனைத்து அபிவிருத்திகளும் அனைத்து வீட்டுத் திட்டங்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மீண்டும் உயிர் பெறும் என்பதனை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன் - என்றார். (அ)



# பாராட்டி கௌரவிக்கப்பட்ட பிரதேச செயலர் ஜெயானந்தி

அம்பாறை, பெப். 02

முன்னாள் கிழக்கு மாகாண பிரதி அஞ்சல் மா அதிபரும், வாழைச்சேனை பிரதேச செயலாளருமான திருமதி ஜெயானந்தி திருச்செல்வம், முன்னணி அஞ்சல் தொழிற்சங்கமான அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்கத்தினால் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

இலங்கை நிர்வாக சேவை முதலாம் தர உத்தியோகத்தரான திருமதி. ஜெயானந்தி திருச் செல்வம் கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை ஆறு வருடங்கள் கிழக்கு மாகாண பிரதி அஞ்சல் மா அதிபராக கடமையாற்றிய காலத்தில் அவர் ஆற்றிய அளப்பரிய சேவைகளை நினைவு கூர்ந்து மேற்படி பாராட்டும், கௌரவமும் அளிக்கப்பட்டது.

அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர் சங்கத்தின் 16 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் தலைவர் தேசமான்ய யூ.எல். எம்.பைஸர் தலைமையில், மாளிகைக்காடு பாவா றோயல் மண்டபத்தில் நடைபெற்ற போது விசேட நிகழ்வாக இந்தப் பாராட்டு நிகழ்வு இடம் பெற்றது.

நிகழ்வில் கிழக்கு மாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் காமினி விமலசூரிய பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். (அ-06)

# உகந்தையில் ஞாயிறு தைப்பூசத் திருவிழா!

அம்பாறை, பெப். 02

வரலாற்று பிரசித்தி பெற்ற உகந்தமலை முருகன் ஆலயத்தில் எதிர்வரும் ஐந்தாம் திகதி ஞாயிற்றுக்கிழமை தைப்பூசத் திருவிழா சிறப்பாக இடம்பெற இருக்கின்றது.

ஆலய பிரதம குரு சிவசிறி க. கு. சீதாராம் குருக்கள் தலைமையில் உதவிக்குருமார்களான சிவசிறி ஆ. கோபிநாத சர்மா மற்றும் சிவசிறி சி.கு. கோவர்த்தன சர்மா ஆகியோரின் ஒத்துழைப்போடு இது இடம்பெறவுள்ளது.

காலை 10 மணியளவில் உகந்த மலையில் இருக்கின்ற வள்ளியம்மன் ஆலயத்திலிருந்து பாற்குடபவனி ஆரம்பித்து ஆலயத்தைச் சென்றடைய இருக்கின்றது.

பாற்குடபவனிக்கான பால் இலவசமாக வழங்கப்படும்.

பக்தர்களுக்கு விசேட பஸ் போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஆலய செயலாளர் சு.சிறிபஞ்சாட்சரம் தெரிவித்தார்.

காலையில் பாற்கூட பவனியை தொடர்ந்து அபிஷேகம் மற்றும் அலங்கார பூசை இடம் பெறும். மாலையில் திருவிளக்குப் பூசை, வசந்த மண்டப அலங்கார பூசை, சுவாமிகள் உள்வீதி உலா வருதல் என்பன இடம்பெறும் எனவும் அவர் மேலும் கூறினார். (அ)

# சாதனை படைத்த மாணவர்களை சந்தித்த வலயக் கல்வி பணிப்பாளர்

அம்பாறை, பெப். 02

இறக்காமம் கோட்டத்தில் இம்முறை வெளி யான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சாதனை படைத்த மாணவர்களை சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை நேரில் சென்று பாராட்டி கௌரவித் தார்.

இறக்காமம் றோயல் கனிஷ்ட கல்லூரியில் 106 மாணவர்கள் பரிட்சைக்கு தோற்றி அதில் 23 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் சித்தி பெற்றிருந்தார்கள்.

இறக்காமம் கோட்டத்தில் அதிகூடிய புள்ளியாக 158 புள்ளிகளை அதே பாடசாலை யைச் சேர்ந்த அப்துல் முனாப் பாத்திமா நுஸைபா மற்றும் எம்.ஆர். ஷஹீட் ஆகியோர் பெற்று சாதனை படைத்துள்ளனர் .

அவர்களை விசேடமாக கைலாகு கொடுத்து பாராட்டி கௌரவித்தார். அதிபர் எம்.ஏ.பஜீல் உள்ளிட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.(அ)



# மட்டக்களப்பு முகத்துவாரம் கடற்பரப்பில் படகு விபத்து

## மீனவரைக் காணவில்லை

மட்டக்களப்பு, பெப். 02

மட்டக்களப்பு முகத்துவாரம் கடற்பரப்பில் கடல் கொந்தளிப்பாக காணப்பட்ட வேளை மீன் பிடிக்கச் சென்ற மீனவரொருவர், படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் காணாமல் போயுள்ளார்.

அந்த படகில் மீன் பிடிக்கச் சென்ற இருவர் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

நேற்று முன்தினம் மீன்பிடித் திணைக்களத்தினால் கடலுக்கு செல்லவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டிருந்த நிலையிலும் குறித்த மீனவர்கள் குடும்ப வறுமை காரணமாக மீன்பிடிக்குச் சென்றுள்ளனர்.

திராய்மடு பகுதியை சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான இருதயநாதன் அந்தோனி என்பவரே காணாமல்போயுள்ளார்.

இது தொடர்பில் மட்டக்களப்பு, கொக்குவில் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# உள்ளூராட்சி மன்ற விவாத போட்டிக்கு மண்முனைபற்று பிரதேச சபை தெரிவு

மட்டக்களப்பு, பெப். 02

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு இடையில் நடைபெற்ற விவாத போட்டியின் இறுதிப் போட்டிக்கு மட்டக்களப்பு மாவட்டத்தின் மண் முனை பற்று பிரதேச சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை உள்ளூராட்சி சம்மேளனத்தின் ஏற்பாட்டில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கிடையில் நடைபெற்ற விவாதப் போட்டியில் சுமார் 64 உள்ளூராட்சி மன்றங்கள் பங்கு கொண்டன.

இதன் இறுதிப் போட்டிக்கான வாய்ப்பை மண் முனை பற்று பிரதேச சபை பெற்றுள்ளது.


விவாத போட்டியின் இறுதிப்போட்டி எதிர் வரும் பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி மண்முனை பற்று பிரதேச சபை உறுப்பினர்களுக்கும் கிளி நொச்சி கரைச்சி பிரதேச சபை உறுப்பினர்களுக் குமிடையில் கொழும்பில் நடைபெறவுள்ளது. (அ)

# கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு நிரந்தர இருதய நோய் நிபுணர் நியமனம்

அம்பாறை, பெப். 02

கல்முனை ஆதார வைத்தியசாலையில் சிறப்பாக இயங்கிவரும் இருதய நோய் சிகிச்சைப் பிரிவுக்கு தற்போது புதிய இருதய நோய் நிபுணராக பிரபல வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி சுசுன் துசியந்த லொகுகெடகொட நியமிக்கப்பட்டுள்ளார்.

கிரிபெத்ஹொடையை பிறப்பிடமாக கொண்ட இவர் வைத்தியத்துறைக்கு முதல் நியமனம் பெற்றார். மேலும் தேசிய வைத்தியசாலை இலங்கை சிரேஷ்ட மருத்துவ பதிவாளராகவும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர போதனா வைத்தியசாலையில் இருதயவியல் துறையின் சிரேஷ்ட பதிவாளராக



கடமையாற்றியிருந்தார்.

தற்போது இடமாற்றம் பெற்று கல்முனை ஆதார வைத்தியசாலையில் இருதய நோய் நிபுணராக கடமையேற்றுள்ளார்.

இவர் ஓர் சிறந்த இருதய நோய் நிபுணராவார். (அ)

ஈழநாடு






# போராட்டங்களால் பிரான்ஸ் ஸ்தம்பிதம்!

பாரிஸ், பெப். 02

தொழிற்சங்கங்கள் தலைமையிலான தொழிலாளர் போராட்டங்களால் பிரான்ஸ் நேற்று முன்தினம் இரண்டாவது தடவையாக ஸ்தம்பிதமடைந்தது.

ஓய்வுபெறும் வயது எல்லையை 62 இல் இருந்து 64 ஆக உயர்த்துவது அடங்கிய சீர்திருத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த நாடு முழுவதும் வேலை நிறுத்தங்களும் பேரணிகளும் நடைபெற்றன. தலைநகர் பாரிஸ் உட்பட முக்கிய நகரங்களில் நடந்த இரண்டாவது நாளாக நேற்று முன்தினம் நடந்த பேரணிகளில் கடந்த போராட்டத்தை விட அதிகளவிலான மக்கள் திரண்டனர்.

முக்கியமான எட்டுத் தொழிற்சங்கங்களால் அழைப்பு விடுக்கப்பட்ட இந்தப் பேரணிகளில் நாடெங்கும் 28 இலட்சம் பேர் கலந்து கொண்டனர் என்று தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

பொலிஸாரின் மதிப்பீடுகளின்படி நாடெங்கும் 12 இலட்சத்து 72 ஆயிரம் பேர் மட்டுமே பங்குபற்றினர் என்று உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த 19 ஆம் திகதி நடந்த முதல் நாள் பேரணிகளில் கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை உள்துறை அமைச்சின் தகவலின்படி 11 இலட்சமாகும்.

பாரிஸ் நகரில் நடந்த மக்கள் பேரணியில் ஐந்து லட்சம் பேர் கலந்து கொண்டனர் என்று தொழிற்சங்கங்கள் மதிப்பிட்டுள்ளன. ஆனால் பாரிஸ் பொலிஸ் தலைமையகம் ஆர்ப்பாட்டக்காரர்களின் எண்ணிக்கை 87 ஆயிரம் என்று அறிவித்துள்ளது.

பாடசாலைகள், பொதுப் போக்குவரத்து எரிபொருள் விநியோக மையங்கள் உட்பட பல்வேறு தொழில்துறையினரும் இன்றைய வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டனர்.

அடுத்த கட்ட வேலை நிறுத்தம் மற்றும் பேரணிகளை எதிர்வரும் பெப்ரவரி 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் 11 ஆம் திகதி சனிக்கிழமையும் இரு தினங்கள் நடத்துவது என்று எட்டுத் தொழிற்சங்கங்களும் முடிவு செய்துள்ளன.

இதேசமயம், ஐரோப்பாவின் முக்கிய பெரிய பொருளாதார சக்திகளான நாடுகளில் பிரான்ஸில் மட்டுமே ஓய்வூதிய வயது எல்லை ஆகக் குறைந்த அளவில் 62 வயதாக உள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

# இஸ்ரேல் - பலஸ்தீனப் பதற்றம் தணிக்கும் பணியில் அமெரிக்கா!

ஜெருசலேம், பெப். 02

இஸ்ரேலுக்கும், பலஸ்தீனத்துக்கும் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் போர் பதற்றத்தைத் தணிப்பதற்காக அந்தப் பிராந்தியத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் அன்ரனி பிளிங்கன், மேற்குக் கரையில் பலஸ்தீன அதிபர் மஹ்மூத் அப்பாஸை செவ்வாய்க்கிழமை சந்தித்து பேச்சு நடத்தினார்.



முன்னதாக, இஸ்ரேலில் அந்த நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை திங்கட்கிழமை சந்தித்துப் பேசிய தற்குப் பிறகு, தற்போது அப்பாஸுடன் அவர் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இந்த சுற்றுப் பயணத்தின் நோக்கம் பதற்றத்தைத் தணிப்பது மட்டுமின்றி, சமாதானத்தை நோக்கி இரு தரப்பினரும் முன்னேறுவதற்கான அமெரிக்காவின் செயல் திட்டங்களை விளக்குவது மாகும் என்று பிளிங்கன் கூறினார்.

மேலும், இஸ்ரேலும், பலஸ்தீனமும் பொறுமை காக்க வேண்டும் என்று இரு தரப்பினரையும் அவர் கேட்டுக் கொண்டார்.

இஸ்ரேல் படையினருக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையே ஜனவரி மாதத் தொடக்கம் முதலே பதற்றம் நிலவி வந்தது. அப்போது நடைபெற்ற சம்பவங்களில் 29 பலஸ்தீனர்கள் உயிரிழந்தனர். இந்த நிலையில், பலஸ்தீனத்தின் மேற்குக் கரை பகுதியில் ஆயுதக் குழுவினரின் ஆதிக்கம் நிறைந்த ஜெனீன் அகதிகள் முகாமில் இஸ்ரேல் இராணுவத்தினர் தேடுதல் வேட்டையில் கடந்த வியாழக்கிழமை ஈடுபட்டனர். இதில் 60 வயது பெண் உள்பட 9 பேர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான போர் பதற்றத்தை அதிகரிக்கும் என்று அமெரிக்கா கவலை தெரிவித்தது.

அதனை உறுதிப்படுத்தும் வகையில், பலஸ்தீனத்தின் காஸா பகுதியிலிருந்து 2 ஏவுகணைகள் இஸ்ரேல் மீது வெள்ளிக்கிழமை வீசப்பட்டன. அதற்கு பதிலடியாக இஸ்ரேலும் காஸா மீது வான்வழித் தாக்குதல் நடத்தியது.

இதற்கிடையே, இஸ்ரேல் கட்டுப்பாட்டில் உள்ள ஜெருசலேம் பகுதியில் அமைந்துள்ள யூத வழிபாட்டுத் தலத்தில் பலஸ்தீனர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 7 பேர் பலியாகினர்.

கடந்த 2008ஆம் ஆண்டுக்குப் பிறகு இஸ்ரேலில் நடத்தப்பட்டுள்ள மிக மோசமான தாக்குதல் இதுவாகும்.

இந்த வகையில் அதிகரித்து வரும் பதற்றத்தைத் தணிப்பதற்காக, அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் அன்ரனி பிளிங்கன் அந்தப் பிராந்தியத்தில் ஞாயிற்றுக்கிழமை முதல் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பல்வேறு தலைவர்களிடம் பேச்சு நடத்தியுள்ளார்.

# மசூதி தற்கொலை தாக்குதல் உயிரிழப்பு 100ஆக அதிகரிப்பு

பெஷாவர், பெப். 02

பெஷாவர் மசூதியில் நடத்தப்பட்ட தற்கொலை தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 100ஆக அதிகரித்துள்ளது.

பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணத் தலைநகர் பெஷாவரில் பாதுகாப்பு மிகுந்த பகுதியிலுள்ள மசூதியில் ஞாயிற்றுக்கிழமை மதியம் தொழுகை நடைபெற்றது.

இதன்போது, தற்கொலை தாக்குதல்தாரி வெடிகுண்டை வெடிக்க வைத்தார். இதில், 61 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

எனினும், மீட்பு பணிகளின் பின்னரும் படுகாயமடைந்தவர்கள் உயிரிழந்தமையாலும் இந்தத் தாக்குதலில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 100ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை, காயமடைந்த நிலையில் 221 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தத் தாக்குதலை தலிபான்கள் தாங்களே நடத்தினர் என்று ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இதேசமயம், குண்டுவெடிப்பை நிகழ்த்தியதாக கருதப்படும் தற்கொலைப் படை தீவிரவாதியின் துண்டிக்கப்பட்ட தலையை மீட்பு அதிகாரிகள் நேற்றுமுன்தினம் மீட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (ஐ)

# பல கோடிகளை ஊக்க ஊதியமாக அள்ளிவழங்கியது சீனா நிறுவனம்!

பீஜிங், பெப். 02

சீனாவை சேர்ந்த ஒரு நிறுவனம் மலையாக பணக்கட்டுகளை குவித்து தனது ஊழியர்களுக்கு கோடிகளில் ஊக்க உயர்வு வழங்கிய நிகழ்வு இணையத்தில் அதிக வரவேற்பை பெற்றுள்ளது.



கொரோனா நெருக்கடி மற்றும் உக்ரைன் போர் காரணமாக உலகில் பொருளாதார மந்த நிலை ஏற்பட்டுள்ளது. இதையடுத்து பல பெரு நிறுவனங்களும் ஊழியர் பணிநீக்கத்தை செய்துள்ளன.

இந்நிலையில், சீனாவின் "ஹெனன் மைன்" என்ற நிறுவனம் பல கோடி ரூபாய்களை ஊழியர்களுக்கு ஊக்க ஊதியமாக வழங்கியுள்ளது. அந்த நிறுவனத்தின் வருமானம் 23சதவீதத்தால் - 916 கோடி யுவான் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 49 ஆயிரத்து 796 கோடி ரூபாய் அதிகரித்தமையே இதற்குக் காரணமாகும்.

சீனாவின் பொருளாதாரமும் மந்த நிலையை அடைந்துள்ள நிலையில் இந்த வருமானத்தால் மகிழ்ச்சியடைந்த நிறுவனம் 61 மில்லியன் யுவான் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 331 கோடி ரூபாயை ஊழியர்களுக்கு ஊக்க ஊதியமாக வழங்கியது. இந்தப் பணத்தை கட்டுகளாக அடுக்கி வைத்து ஒவ்வொரு ஊழியருக்கும் 50 இலட்சம் யுவான் - சுமார் 27 கோடி ரூபாயை ஊக்க ஊதியமாக வழங்கியது.

இது தவிர பணம் எண்ணும் போட்டியையும் வைத்த அந்த நிறுவனம் அதில் வெற்றி பெற்றவர்களுக்கும் பணத்தை அள்ளி வழங்கியுள்ளது.

"ஹெனன் மைன்" நிறுவனம் பாரந்தூக்கிகள் உள்ளிட்ட கனரக வாகனங்களை தயாரித்து வருகின்றது. இந்த வாகனங்களை உலகின் பல நாடுகளும் இறக்குமதி செய்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இந்துக் கோயிலின்மீது மெல்பர்னில் தாக்குதல்!

மெல்பர்ன், பெப். 02

அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் உள்ள சிவா விஷ்ணு கோயிலில் காலிஸ்தான் பிரிவினைவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தியுள்ளனர். அத்துடன், கோயில் சுவர்களை சேதப்படுத்தி, காலிஸ்தான் ஆதரவு படங்கள், வாசகங்களை எழுதினர். இந்தத் தாக்குதலில் சிலர் காயம் அடைந்தனர். அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.



அண்மைக்காலமாக அவுஸ்திரேலியாவில் உள்ள பல கோயில்களில் சமீப காலமாக தாக்குதல் நடத்தப்படுகின்றன. இதில், குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். கோயில்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று அவுஸ்திரேலிய அரசை இந்திய அரசு வலியுறுத்தியுள்ளது.

இந்நிலையில், தாக்குதல் நடந்த சிவா விஷ்ணு கோயிலுக்கு அவுஸ்திரேலியாவுக்கான இந்திய தூதர் மன்பிரீத் வோரா நேற்று நேரில் சென்று பார்வையிட்டார். அங்கு இந்துக்களிடம் கலந்துரையாடினார். (ஐ)




# கொண்டாடி தீர்த்த கரனுக்கு அபராதம்!

டுபாய், பெப். 02

தென்னாபிரிக்காவில் இங்கிலாந்து அணி 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகின்றது.

இதில், இரண்டாவது ஒருநாள் போட்டியிலும் வென்று தென்னாபிரிக்கா தொடரை கைப்பற்றி யுள்ளது.

இந்தப் போட்டியில் பவுமாவின் வெற்றியை கொண் டாடிய சாம் கரனுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

28ஆவது ஓவரில் தென்னாபிரிக்கா அணித்தலைவர் பவுமாவை "போல்ட்" முறையில் ஆட்டமிழக்க செய்தார் சாம் கரன். இதையடுத்து அவரின் அருகே சென்று ஆக்ரோஷமாக வெற்றியைக் கொண்டாடினார்.

இது ஐ. சி. சியின் நடத்தை விதி மீறலாக அமைந்த தால் அவருக்கு போட்டியின் கட்டணத்தில் இருந்து 15சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன், ஒழுங்கு முறை பதிவிலும் அவருக்கு ஒரு புள்ளி குறைக்கப்பட்டுள்ளது.

24 மாத காலத்தில் அவர் செய்த முதல் குற்றம் இது வாகும். 24 மாத காலத்தில் வீரர் ஒருவர் 4 புள்ளிகள் குறைந்தால் அவர் போட்டி தடையை எதிர்கொள்ள நேரிடும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சூரியகுமார் யாதவ் புதிய சாதனை




டுபாய், பெப். 02

இருபது - 20 தரவரிசையில் 900 புள்ளிகளை பெற்ற முதல் இந்தியர் என்கிற சாதனையை சமீபத்தில் படைத் தார் சூர்யகுமார் யாதவ்.

இலங்கைக்கு எதிரான 3ஆவது இருபது -20 போட்டியில் சதமடித்தார். ஐ. சி. சி. இருபது -20 தரவரிசையில் 900 புள்ளிகளைப் பெற்ற முதல் இந்தியர் என்ற பெருமையுடன் முதலிடத்தை தக்கவைத்துக் கொண்டார்.

இதற்கு முன்பு டேவிட் மலான், அரோன் பின்ஞ் ஆகிய இருவரும் மட்டுமே 900 புள்ளிகளை அடைந் துள்ளார்கள். இந்திய வீரர்களில் கோலி அதிகபட்சமாக 897 மற்றும் ராகுல் 854 புள்ளிகளைப் பெற்றுள்ளார்கள்.

இந்நிலையில், தற்போது வெளியிடப்பட்ட இருபது - 20 தரவரிசையிலும் சூர்யகுமார் யாதவ் முதலிடத்தைப் பிடித்துள்ளார். நியூசிலாந்துக்கு எதிரான முதல் இருபது - 20இல் 47 ஓட்டங்கள் எடுத்தார். இதனால் 908 புள்ளிகள் பெற்றுள்ளார்.

இதன்மூலம் இருபது - 20 தரவரிசையில் அதிக புள்ளிகளைப் பெற்ற 2ஆவது வீரர் என்ற பெருமையை அடைந்துள்ளார்.

இருபது - 20 கிரிக்கெட்டில் அதிக புள்ளிகளைப் பெற்றவர் இங்கிலாந்தின் மலான். அவர் எடுத்த 915 புள்ளிகளை சூர்யகுமார் விரைவில் நெருங்கி விடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# வீசா சிக்கலால் தனித்த கவாஜா

சிட்னி, பெப். 02

அவுஸ்திரேலிய அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் செய்து 4 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டிகளில் விளை யாடுகிறது. டெஸ்ட் தொடர் எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் தொடங்குகிறது. எந்தவொரு பயிற்சி ஆட்டத் திலும் விளையாடாமல் முதல் டெஸ்டில் களமிறங்குகிறது ஆஸி. அணி.

இந்தத் தொடருக்காக சிட்னியிலிருந்து புறப்பட்ட அவுஸ்திரேலிய அணி வீரர்கள் நேராக பெங்களூர் சென்றுள்ளனர். இந்நிலையில் பிரபல துடுப்பாட்ட வீரர் உஸ்மான் கவாஜா மட்டும் நுழைவு இசைவு (வீஸா) கிடைக்காத காரணத்தால் இந்தியாவுக்கு உடனடி யாக வரமுடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

வீசாவுக்கான ஏற்பாடுகள் கடந்த மாதம் முதல் நடைபெற்று வந்தாலும் கவாஜாவுக்கு மட்டும் வீசா கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டதால் அவரில்லாமல் ஆஸி. அணி இந்தியாவுக்கு வந்துள்ளது. எனினும், கவாஜாவுக்கு விரைவில் வீசா கிடைப்பதற்கான ஏற்பாடுகளை கிரிக்கெட் அவுஸ்திரேலியா செய்து வருகிறது. இதனால் சிட்னியில் தனிமையில் உள்ளார் கவாஜா. இதுகுறித்து இன்ஸ்ட்ராகிராம் பதிவையும் அவர் வெளியிட்டுள்ளார்.

பாகிஸ்தானில் பிறந்த கவாஜா, அவுஸ்திரேலிய குடிமகனாக உள்ளார். இந்தியாவில் இதுவரை ஒரு டெஸ்டிலும் விளையாடவில்லை என்றாலும் 2013, 2017 ஆண்டுகளில் ஆஸி. அணியினருடன் இந்தியா வுக்கு வருகை தந்துள்ளார். இன்றைய தினம் கவாஜா பெங்களூருக்கு சென்று விடுவார் என எதிர்பார்க்கப் படுகிறது. (ஐ)






# பெர்னாண்டஸ் ரூ. 4,834 கோடிக்கு பரிமாற்றம்!

லண்டன், பெப். 02

ஆர்ஜென்ரீனாவின் நடுக்கள வீரர் என்ஸோ பெர்னாண்டஸை பிரிட்டனின் செல்சீ அணி 121 மில்லி யன் யூரோ - நம் நாட்டு மதிப்பில் சுமார் 4 ஆயிரத்து 834 கோடி ரூபாய் வாங்கியுள்ளது. பிரிட்டனின் வீரர்கள் பரிமாற்ற வரலாற்றில் இதுவே அதிக தொகையாகவும் உள்ளது.

கழக அணிகளில் பென்பிகா அணிக்காக என்ஸோ பெர்னாண்டஸ் விளையாடி வந்தார். இவர் கடந்த ஆண்டு ஒகஸ்டில் 10 மில்லியன் ஸ்ரேலிங் பவுண் டஸூக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார்.

கடந்த ஆண்டு கட்டாரில் நடந்த உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடரில் ஆர்ஜென்ரீனா சம்பியனைக் கைப்பற்றியது. இதில், சிறந்த இளம் வீரராக பெர்னாண்டஸ் தெரிவானார்.

இந்நிலையிலேயே 22 வயதான பெர்னாண்டஸை 121 மில்லியன் யூரோவுக்கு செல்சீ ஒப்பந்தம் செய்துள்ளது. பிரிட்டனின் கழக வரலாற்றில் இதுவே அதிக வீரர்கள் பரிமாற்ற தொகையாகும்.

ஐரோப்பிய கழக வரலாற்றில் 200 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ட்ஸூக்கு பிரபல வீரர் நெய்மர் பார்சிலோனா அணியிலிருந்து பாரிஸ் சென். ஜெர்மைன் அணிக்கு 2017இல் பரிமாற்றம் செய்யப்பட்டமையே சாதனையாக உள்ளது. (ஐ)

# டெஸ்ட் எதிர்காலம்; கவலையடைகிறேன்

## டேவிட் வோர்ணர்

மெல்பர்ன், பெப். 02

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பது குறித்து நான் கவலை கொண் டுள்ளேன் என்று அவுஸ்திரேலிய தொடக்க ஆட்டக் காரர் டேவிட் வோர்ணர் கூறினார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களுக்கு விருதுகள் வழங்கும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

விழாவில் கலந்துகொண்ட டேவிட் வோர்ணர் பேசுகையில்,

அடுத்த ஐந்து முதல் 10 ஆண்டுகளில் என்ன நடக்கும். கிரிக்கெட் எந்த திசையில் செல்லும் என்பதை நினைத்தால் எனக்குக் கொஞ்சம் கவலை ஏற்படுகிறது. டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாட ஆர்வமாக இருக்கும் வீரர்களை கண்டு மகிழ்ச்சி கொள்கிறேன். அந்தப் பெருமிதம்தான் உங்கள் வாழ்க்கையில் முக்கியமானதாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவது அற்புதமான விடயமாகும். டெஸ்ட் போட்டிகள் உங்கள் கிரிக்கெட் திறமையை நன்கு பரிசோதிக்கக்கூடியதாக இருக்கும்.

கிரிக்கெட் ஜாம்பவான்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொள்ளவும் அந்த டெஸ்ட் போட்டிகள் வாய்ப்பை உருவாக்கும். அவுஸ்திரேலிய அணிக்காக விளையாட எண்ணினால் அதற்கேற்ப நமது திறமையை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

தொடர்ச்சியாக ஓட்டங்களைக் குவிக்க வேண்டும்.

சிட்னி தண்டர் அணி வீரர் டேவிஸிடம் அண்மையில் நான் பேசிக்கொண்டிருந்தேன். அவர் வெள்ளை பந்து கிரிக்கெட்டில் (ஒருநாள், இருபது -20) விளையாடுவதற்கு ஆர்வமாக உள்ளார். அவர் இப்போதைக்கு டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடுவது போலத் தெரியவில்லை. டெஸ்ட் போட்டிகளில் விளையாடாமல் வெள்ளைப் பந்து கிரிக்கெட்டில் மட்டும் விளையாடியவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது. உலகம் முழுவதும் நடைபெறும் இருபது -20 லீக் போட்டிகளில் பங்கேற்பதற்குத்தான் பலருக்கும் ஆர்வம் உள்ளது. இருபது - 20 போட்டி களில் விளையாட நினைக்கும் வீரர்கள், டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்பதற்கும் தயாராக இருக்க வேண்டும் - என்றார். (ஐ)



# நாணய நிதியத்தின் உதவி நாட்டுக்கு விரைவில் கிட்டும்

## அமெரிக்கத் தூதுவர் உறுதியளிப்பு

கொழும்பு, பெப். 02


சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான உதவிகள் அனைத்து நாடுகளின் ஒத்துழைப்புடன் துரிதப்படுத்தப்பட வாய்ப்புள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் உறுதியளித்துள்ளார்.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவை சந்தித்தபோதே அமெரிக்க தூதுவர் ஜூலி சுங் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பில் வெளிநாடுகளின் நம்பகத்தன்மையை மேலும் உறுதிப்படுத்தும் நடவடிக்கையில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நிதி ஸ்திரத்தன்மையை பேணுவதற்கு அரசாங்கம் மக்கள் விரும்பத்தக்காத சீர்திருத்தங்களை மேற்கொண்டாலும் ஒரு நாடாக ஒன்றிணைந்து செயல்படுவதற்கு அவர் பாராட்டும் தெரிவித்தார்.

இதனால், சர்வதேச கடன் வழங்குநரிடமிருந்து சாதகமான முடிவுகளையும் நிலையான பொருளாதாரத்தை விரைவில் அடைய முடியும் என்றும் அதற்கு அமெரிக்கா முழுமையான ஆதரவை வழங்கும் என்றும் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் குறிப்பிட்டார். (அ)



# சீரற்ற காலநிலையால் விவசாயிகள் பாதிப்பு!



மன்னார், பெப். 02

மன்னார்,கிளிநொச்சி மாவட்டங்களில் தொடர்ச்சியாக மழையுடன் கூடிய கால நிலை நிலவி வருகின்ற நிலையில் விவசாய செய்கை யில் ஈடுபட்டுள்ள ஆயிரக் கணக்கான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மழை காரணமாக அறுவடைக்கு தயாரான நிலையில் காணப்பட்ட நெற்செய்கைகள் சரிந்துள்ளதுடன் வயல் நிலங்களுக் குள் நீரும் அதிகளவு தேங்கியுள்ளது.

அதே நேரம் அறுவடையின் பின்னர் வீதிகளில் உலர விடப் பட்டிருந்த பல தொன் நெல் முற்றுமுழுதாக மழையில் நனைந்துள்ளது.

முன்னதாகவே பசளை, உரம், ஏரிபொருள் விலை என அனைத்தின் விலையேற்றத்தின் மத்தியிலும் விவசாய செய்கையை மேற்கொண்ட விவசாயிகளிடம் நெல் மிகவும் குறைந்த விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டு வரும் நிலையில் சீரற்ற கால நிலை காரணமாக மன்னார், கிளிநொச்சி மாவட்ட ஏழை விவசாயிகள் மேலும் பாதிக்கப்பட்டுள்ளனர். (அ)

# 8000 பேருக்கு சம்பளம் வழங்கினால் நாடு மீண்டும் அதலபாதாளத்துக்கு!

## ஐக்கிய தேசிய கட்சி சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 02

மக்களின் நம்பிக்கை மீண்டும் அதிகரிக்கும் இந்த சந்தர்ப்பத்தில் 8000 உறுப்பினர்களுக்கு சம்பளம் வழங்கவேண்டுமென எதிர்க்கட்சி எதிர்பார்ப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

இதன் காரணமாக நாடு மீண்டும் பொருளாதார பாதாளத்தில் விழுவதுடன் சுற்றுலாத்துறையும் பாதிக்கப்படலாம் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

மேலும், எதிர்காலத்தில் வாகனங்களைப் பெற்றுக் கொள்ள எடுத்த கடன்களையும் வங்கிக் கடனைச் செலுத்த முடியாதவர்களும்கூட கடினமான காலத்தை சந்திக்க நேரிடும் என பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

சுமார் 20 பில்லியன்கள் தேர்தலுக்காக மட்டுமே செலவிடப்படும் என்பதோடு தெரிவு செய்யப்பட்ட 8000 உறுப்பினர்களுக்கு அதன் பின்னர் மாதாந்தம் சம்பளங்களை வழங்கவேண்டும் என்று அவர் கூறினார்.

இதனை மக்கள் புரிந்து கொள்ளவேண்டும் எனவும், பொருளாதார நெருக்கடிக்கு மீண்டும் முகங்கொடுக்க முடியாது என்றும் வஜிர அபேவர்த்தன கூறினார். (அ)

# 3 நாடுகளின் தூதரக கட்டடங்கள் சீராக பயன்படுத்தப்படுவதில்லை

கொழும்பு, பெப். 02

அவுஸ்ரேலியா, சுவீடன், கென்யா ஆகிய நாடுகளில் தூதரகங்கள் செயற்படும் இலங்கை அரசுக்கு சொந்தமான கட்டடங்கள் சிறந்த முறையில் பயன்படுத்தப்படவில்லை என கணக்காய்வாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு தூதரகங்களுக்கு பணியாளர்களை நியமிப்பதில் ஒவ்வொரு நாடும் பயன்படுத்தும் முறையான அளவுகோல்களை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அரச கணக்குக் குழு உத்தரவிட்டிருந்தது.

இருப்பினும் 2021 ஆம் ஆண்டு வரை அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் இந்த தகவல் வெளிவிவகார அமைச்சின் 2021 ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் கணக்காய்வாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (அ)

# மரண அறிவித்தல்



## துரைராஜசிங்கம் செல்வகிருபாகரன்

யாழ். மானிப்பாய் மேற்கைப் பிறப்பிடமாகவும், டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட துரைராஜசிங்கம் செல்வகிருபாகரன் கடந்த 29-01-2023 ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார், காலஞ்சென்ற துரைராஜசிங்கம்(கிளி), நாகேஷ்வரி (டென்மார்க் - முன்னாள் தபால் நிலைய தொலைபேசி தொடர்பாளர்) தம்பதியரின் சிரேஷ்ட புத்திரரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், ராஜேஷ்வரி தம்பதியரின் மருமகனும், அனுலா அவர்களின் அன்புமிகு கணவரும்,டேனிகா, தேனிகா, அரிஷ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், செபஸ்ரியன், கிறிஸ்ரியன் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமகள்(ஜீன் - லண்டன்), கருணாகரன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,அனுஷா(ஜேர்மனி), அருணன் (சுவிஸ்), தயாநிதி(லண்டன்), சுமதி(டென்மார்க்) ஆகியோரின் மைத்துனரும், ரவீந்திரன்(ஜேர்மனி), விஜிதா(சுவிஸ்) ஆகியோரின் சக லையும்,சோபிகா, தீபிகா, கிஷன்(லண்டன்) ஆகியோரின் தாய் மாமனும், துஷாகரன், அபீஷ்கரன்(டென்மார்க்) ஆகியோரின் பெரியப் பாவும்,ஏஞ்சன், ஏஞ்சல் ஆகியோரின் மாமனாரும், லக்ஷ்மிபிரியா, யோகலட்சுமி, அனுஷன்(ஜேர்மனி) ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02-02-2023) வியாழக்கிழமை நண்பகல் 1.00 மணியளவில் டென்மார்க்கில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்

**குடும்பத்தினர்**

# கழிவகற்றல் பொறிமுறை குறித்து யாழ். மாநகர சபையில் ஆராய்வு

யாழ்ப்பாணம், பெப். 02

யாழ் போதனா வைத்திய சாலையில் மருத்துவ கழிவுகளை உரிய முறையில் அழிப்பதற்கு யாழ் மாநகர சபைக்குட்பட்ட கோம்பயன் மணல் இந்து மயானப் பகுதியில் ஒரு இடத்தைத் தெரிவு செய்து அந்த இடத்தில் கழிவகற்றல் பொறிமுறை உருவாக்குவது தொடர்பில் நேற்று முன் தினம் யாழ்.மாநகர சபையில் விசேட கலந்துரையாடல் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.



யாழ். மாநகர சபையின் முதல்வர் இம்மானுவேல் ஆனோல்ட், யாழ்.போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்திய மூர்த்தி, மாநகர சபையின் ஆணையாளர், மாநகர சபையின் பொறியியலாளர்கள், தொழில்நுட்ப வியலாளர்கள் இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

குறிப்பாக வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகள் தற்போது தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கே அழிக்கப்படுகின்றன.

எனினும், யாழ். போதனா வைத்தியசாலையானது, யாழ்.குடாநாட்டில் உள்ள அனைவரது வைத்திய தேவையை பூர்த்தி செய்கின்ற ஒரு வைத்தியசாலை என்பதனால் அதிகளவு மருத்துவ கழிவுகள் ஒவ்வொரு நாளும் சேகரிக்கப்படுகின்றன.

எனவே அந்த கழிவுகளை யாழ்ப்பாண மாநகரத்துக்குட்பட்ட கோம்பயன் மணல் இந்து மயானப் பகுதியில் பாதுகாப்பான முறையில் பொதுமக்களுக்கு இடைஞ்சல் இல்லாத வகையில் அழிப்பது தொடர்பில் ஆராயப்பட்டது. (அ)

# ஜனாதிபதியின் ஆலோசகரை சந்தித்த உலக வங்கியின் பொருளாதார நிபுணர்

கொழும்பு, பெப். 02

உலக வங்கியின் மூத்த பொருளாதார நிபுணர் ரிச்சர்ட் வோக்கர், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்கவை சந்தித்து கலந்துரையாடினார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன் தினம் பிற்பகல் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் உலக வங்கியின் உதவித் திட்டம் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இதன்படி, நிதிக் கண்காணிப்பு மற்றும் கடன் முகாமைத்துவத்தை மேம்படுத்துதல் உட்பட பல விடயங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், வரி நிர்வாகக் கொள்கையை மேம்படுத்துதல், நிதித் துறையில் முறையான அபாயத்தைக் குறைத்தல் தொடர்பாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

விநியோக முறையை வலுப்படுத்துதல் கொள்கை நிச்சயமற்ற தன்மையை குறைத்தல் மற்றும் பொருளாதாரத்தின் போட்டித்தன்மையை அதிகரிப்பது மற்றும் அவற்றை செயல்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டது. (அ)

## 75ஆவது...

தின நிகழ்வை நடத்துவது பெரும் குற்றமும் வீண் விரயமுமாகும் என்றும் அவர் கூறினார்.

பொரளையில் உள்ள பேராயரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், 75ஆவது சுதந்திர தினத்தை பெருமையாகவும் பிரமாண்டமாகவும் நடத்துவதற்கு அதிக பணம் செலவழிப்பதை கத்தோலிக்க திருச்சபை கடுமையாக எதிர்க்கிறது. அனைத்து அரசியல் தலைவர்களும் மக்களிடம் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

## 13அமுலானால்...

திருத்தம் செய்யவோ,13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவோ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்கள் ஆணை கிடையாது. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கிடைக்கப் பெற்ற மக்களாணைக்கு அமையவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயல்பட வேண்டும்.

சரத் வீரசேகர, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யாஹம்பத் உட்பட தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியத்தின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் மகாநாயக்க தேரர்களை சந்தித்து அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் உரையாடினர்.

இதன்போது, வீரசேகர மேலும் கூறுகையில், அரசமைப்பின் 13ஆவது திருத்தம் இலங்கை மக்களின் விருப்பத்துக்கு அமைய நிறைவேற்றப்பட்டது அல்ல. 1987ஆம் ஆண்டு நாட்டில் அமைதியற்ற தன்மை காணப்பட்டபோது ஊரடங்கு சட்டம் விதிக்கப்பட்டு, பாராளுமன்ற உறுப்பினர்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் இந்தியாவால் பலவந்தமான முறையில் 13 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தால் நாடு 9 மாகாணங்களாக பிரிக்கப்பட்டது. நிலப்பரப்பில் சிறிய நாடான இலங்கைக்கு 9 நிர்வாக அலகுகள் அவசியமற்றது. 13 ஆவது திருத்தத்துக்கு அரசமைப்பு திருத்தம் ஊடாக தடை விதிக்கப்பட்டால் நாட்டின் இறையாண்மை பாதுகாக்கப்பட்டுள்ளது.

13ஆவது திருத்தத்தின் பிரகாரம் மாகாணங்களுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்கினால் நாட்டின் தேசிய பாதுகாப்பு கேள்விக்கு உள்ளாக்கப்படும்.விடுதலை புலிகள் அமைப்பு இலங்கையில் இருந்து மாத்திரம்தான் ஒழிக்கப்பட்டுள்ளது. புலிகள் அமைப்பின் ஆதரவாளர்கள் மற்றும் விடுதலை புலிகள் சர்வதேச மட்டத்தில் பலமான முறையில் செயல்படுகிறார்கள்.

மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்கினால் 9 மாகாணங்களுக்கு 9 பொலிஸ்மா அதிபர்கள். இவர்கள் மாகாண முதலமைச்சரால் நியமிக்கப்படுவார்கள், முதலமைச்சர்கள் அரசியல்வாதிகள் ஆகவே பொலிஸ் மா அதிபர்கள் அரசியல்வாதிகளால் நேரடியாக நியமிக்கும் போது நாட்டின் சட்டம் ஒழுங்கு எவ்வாறு பாதுகாக்கப்படும்.

1987ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை ஆட்சியில் இருந்த ஜனாதிபதிகள் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முயற்சிக்கவில்லை. ஏனெனில் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தினால் நாட்டில் தேவையில்லாத பிரச்சினைகள் தோற்றம்பெறும் என்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள்.

நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள பின்னணியில் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கிறார். 13 ஆவது திருத்தம் அமுல்படுத்தப்பட்டால் நாட்டில் சிங்கள- தமிழ் இனகலவரம் மீண்டும் தோற்றம் பெறும் - என்றார். (ஐ)

## பயங்கரவாத

தடைச் சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும். அத்துடன், ஓரின சேர்க்கையை குற்றமாக்குவதை நீக்க வேண்டும் - என்றும் வலியுறுத்தினர்.

மீளாய்வு செயல் குழுவால் மீளாய்வு செய்யப்படும் நாடுகளில் ஒன்றான இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை தொடர்பான ஆய்வுகளும் 2008, 2012 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்டன.

அரசாங்கம் வழங்கிய அறிக்கைகள் மனித உரிமை நிபுணர்கள் மற்றும் குழுக்களின் அறிக்கைகள் மனித உரிமைகள் ஒப்பந்த அமைப்புகள், தேசிய மனித உரிமை நிறுவனங்கள், பிராந்திய நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூக குழுக்களின் அறிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த மதிப்பாய்வு செய்யப்படுகிறது. (ஐ)

## உண்மையான...

துணை இராஜாங்க அமைச்சு செயலாளர் விக்ரோறியா நூலண்ட் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பேச்சுகளை தொடருமாறு கூறிய அவர் இன்னும் சில நாட்களில் பேச்சு உறுதியான நிலைப்பாட்டை எட்டும் என்றும் கூறினார்.

இலங்கை வந்துள்ள விக்ரோறியா நூலண்ட் நேற்று புதன்கிழமை சிறுபான்மை தலைவர்களை சந்தித்துப் பேச்சு நடத்தினார். இந்த சந்திப்பு தொடர்பில் மேலும் அறிய வருகையில்,

சிறுபான்மை தலைவர்கள் அரசாங்கத்துடன் கலந்தாலோசிப்பதில் மகிழ்ச்சி. கடந்த டிசெம்பரில் தொடங்கிய இந்தப் பேச்சு - ஆலோசனைகள் சிறுபான்மை மக்களுக்கு உண்மையான முடிவுகள் உருவாவதைக் காண அமெரிக்கா ஆர்வமாக இருக்கிறது. அத்துடன், இந்தப் பேச்சை தொடரவும் உறுதியான தீர்வை வழங்கவும் ஒன்றிணைந்து செயல்படவும் ஊக்குவிக்கிறோம். இன்னும் சில நாட்களில் பேச்சு உறுதியானதாக மாறும் என்றும் கூறினார்.

கொழும்பிலுள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற இந்த சந்திப்பில், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், புளொட் தலைவர் சித்தார்த்தன், தமிழரசு கட்சியின் சுமந்திரன், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம், மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சீனா...

கருத்துரைத்த அவர்,

290 கோடி டொலர் பிணை எடுப்பு தொகையை திறக்க இலங்கைக்கு உதவ, மற்ற கடனாளிகளுடன் சேர்ந்து சர்வதேச நாணய நிதியத்துக்கு சீனா நம்பகமான மற்றும் குறிப்பிட்ட உத்தரவாதங்களை வழங்க வேண்டும் என்று அமெரிக்கா விரும்புகிறது.

இலங்கை கடந்த செப்ரெம்பர் மாதம் உலகளாவிய கடன் வழங்குநருடன் பணியாளர் மட்ட உடன்படிக்கையில் ஈடுபட்டது. மூன்றாவது குறிப்பிடத்தக்க கடன் வழங்குநரான இந்தியா, கடந்த மாதம் ஐ. எம். எவ்வுக்கு அதன் நிதி உத்தரவாதங்களை அனுப்பியது.

"சீனா இதுவரை வழங்கியது போதாது. அவர்கள் ஐ. எம். எவ். தரநிலையான கடன் நிவாரணத்தை அடைவார்கள் என்பதற்கான நம்பகமான மற்றும் குறிப்பிட்ட உத்தரவாதங்களை நாம் பார்க்க வேண்டும்"

"நாங்கள் - அமெரிக்கா எங்கள் பங்கைச் செய்யத் தயாராக இருக்கிறோம். எங்கள் பாரிஸ் கிளப் பங்காளிகள் தங்கள் பங்கைச் செய்யத் தயாராக உள்ளனர். இந்தியா ஐ. எம். எவ். எதிர்பார்க்கும் நம்பகமான உத்தரவாதங்களை வழங்கும் என்று வலுவான உறுதிமொழிகளை வழங்கியுள்ளது." - என்றும் கூறினார். (ஐ)

# உள்ளூராட்சி தேர்தலுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்!

## ஜனாதிபதிக்கு தேர்தல் ஆணைக்குழு கடிதம்



கொழும்பு, பெப். 02

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருக்கிறோம். அத்துடன், உள்ளூராட்சி மன்ற சபைகளை கலைக்கும் அதிகாரம் உள்ளூராட்சி அமைச்சருக்கே இருக்கிறது. அதனால் இதுதொடர்பாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரிடம் கேட்டிருக்கிறோம் என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தல் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணை நடவடிக்கை தொடர்பில் ஆணைக்குழுவுக்கு திருப்தியடைய முடியாமல் இருக்கிறது.

அதேபோன்று தேர்தலை நடத்துவதற்காக அரச அமைப்புகளில் இருந்து கிடைக்கப்பெறும் ஆதரவு போதுமானதாக இல்லாமல் இருப்பது தொடர்பாக ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளேன்.

அத்துடன் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தல் தொடர்பான விசாரணை நடவடிக்கை துரிதமாகவும் செயற்பாடுடையதாகவும் இருக்கவேண்டும்.

அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு தொடர்பில் திருப்தியடைய முடியும் என்பது தொடர்பாகவும் தெரிவித்திருக்கிறேன்.

அத்துடன் யார் என்ன சொன்னாலும் உயர் நீதிமன்றத்தின் நிலைப்பாட்டின் பிரகாரமே ஆணைக்குழு செயற்படுகிறது. நிதிச் செயலாளர் பாராளுமன்ற நிதிக்குழுவுக்கு வந்த சந்தர்ப்பத்தில், நிதி பிரச்சினை தொடர்பாக குறிப்பிட்டிருந்தபோதும் தேர்தலுக்கு நிதி வழங்க முடியாது என தெரிவிக்கவில்லை.

மேலும், உள்ளூராட்சிமன்ற சபைகளை கலைக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு இல்லை. அது உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சருக்கே இருக்கிறது. அதனால் இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரிடம் கேட்டிருக்கிறோம் எனவும் குறிப்பிட்டார்.

## பெற்றோலின்...

நள்ளிரவு முதல் 400 ரூபாயாக விலை உயர்ந்தது.

இதேசமயம், ஏனைய எரிபொருட்களின் விலையில் எந்த மாற்றமும் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## 3 அரசியல்...

கிருபானந்தம் 2008ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டிருந்தார். இவருக்கு, கடந்த மாதமே 6 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

இதேபோன்று, விக்ரர் றொபின்சன் கடந்த 2014ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டிருந்தார். இவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இவர்கள் இருவரும் நேற்றிரவு விடுதலையாகினர்.

இதேநேரம் விடுதலை செய்யப்பட்ட மூன்றாவது நபரான கிளிநொச்சியை சேர்ந்த செல்லையா சதீஸ்குமார் 2007ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டிருந்தார். கிளிநொச்சி மருத்துவமனையின் அம்புலன்ஸ் சாரதியான இவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. தனது தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்துள்ளார்.

இதனால் அவர் நேற்றிரவு விடுவிக்கப்படவில்லை. மேன்முறையீட்டு மனுவை திரும்பப் பெற்றதும் விடுவிக்கப்படுவார் என்று அறிய வருகிறது. (ஐ)

## அமைதியற்ற...

குறித்து நேற்று ஆராயப்பட்டது. இதில் உரையாற்றிய அவர்,

அரசாங்கத்தின்மீதான பொது நம்பிக்கையை அதிகரிக்கவும் பாராளுமன்றத்தை வலுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஜனநாயக ஆட்சி மற்றும் நிதிப் பொறுப்புணர்வை வலுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் கூறினார்.

மேலும், ஐ. நா. மனித உரிமைகள் பொறிமுறைகளுடனான ஒத்துழைப்பு, அரசமைப்பு சீர்திருத்தத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மற்றும் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை சுட்டிக்காட்டினார். அத்துடன், பாலின அடிப்படையிலான வன்முறையைக் கையாள்வது மற்றும் பாதிக்கப்படக் கூடியவர்களை பாதுகாப்பதற்கான முயற்சிகள் குறித்தும் அவர் பேசினார். (ஐ)

## ஐ.நாவில்...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 42ஆவது கூட்டத் தொடரில் முழுநிறை காலமுறை மீளாய்வு செயல்குழுவில் இலங்கை குறித்து நேற்று மீளாய்வு செய்யப்பட்டது. இதில், பங்கேற்ற இந்தியாவின் பிரதிநிதி உரையாற்றியபோதே மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

இதன்போது, இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்த எடுக்கப்பட்ட கொள்கைகள் அவ்வாறே அமுல்படுத்தப்பட வேண்டும். வறுமையை ஒழிக்கவும் பாதிக்கப்படக்கூடிய சமூகக் குழுக்களின் மீதான தாக்கத்தை குறைக்கவும் முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். இதில், இந்திய வம்சாவளி தமிழ் மக்களையும் உள்ளடக்க வேண்டும். அனைத்து பிரஜைகளின் மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார். (ஐ)

## அறிவித்தபடி...

நேற்று புதன்கிழமை உறுதியளித்துள்ளார். இதன்போது, நாடு எதிர்நோக்கும் மிகவும் கடினமான சூழ்நிலையில் அமெரிக்கா வழங்கிய ஆதரவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நன்றியைத் தெரிவித்தார்.

தவிர, 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தை அமுல்படுத்துவது உட்பட அது தொடர்பில் சிறிய கட்சிகளுடன் நடத்தப்படும் பேச்சுகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான நடவடிக்கைகள் குறித்தும் ஜனாதிபதி அவருக்கு தெளிவுபடுத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில், அதிகரித்து வரும் போதைப்பொருள் வர்த்தகத்திற்கு எதிராக தொடர்ச்சியாக எடுக்கும் முயற்சிகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# தமிழர்களுக்காக மாகாண சபை முறைமையை ஆதரிக்கின்றோம்

## அநுரகுமார சுட்டிக்காட்டு



கொழும்பு, பெப். 02

**மாகாண சபை முறைமை தமிழ் மக்களின் உரிமைகளைப் பாது காக்கும் வகை யில் உள்ளதால் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கமாட் டோம் என மக்கள் விடுதலை முன் னணியின் தலைவர் அநுரகுமார திஸா நாயக்க எம்.பி. தெரிவித்தார்.**

அவர் மேலும் கூறுகையில்- மாகாண சபை முறைமை அறி முகப்படுத்தப்பட்ட போது நாட் டில் அமைதியற்ற நிலை ஏற்பட் டது. அக்காலக்கட்டத்தில் சிங்கள அரசியல்வாதிகளுக்கும், தமிழ்த் தலைமைகளுக்கும் இடையில் பேச்சு நடந்து இணக்க மான சூழ லில் மாகாண சபை முறைமை அறி முகப்படுத்தப்படவில்லை. இந்தியா வின் தேவைக்காகவே மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப் பட்டது. ஆனால், தற்போது நிலைமை மாற்றமடைந்து விட்டது.

தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவே மாகாண சபை முறைமை உள்ளது. ஆகவே, மாகாண சபை முறைமையை தொடர்ந்து முன்னெடுத்துச் செல் வதை எதிர்க்கப்போவதில்லை - என்றார். (அ)

# 4 அத்தியாவசிய பொருட்கள் இன்று முதல் விலை குறைப்பு

கொழும்பு, பெப். 02

லங்கா சதொச மேலும் நான்கு அத்தியாவசிய பொருட்களுக்கான விலையை குறைத்துள்ளது.

அதற்கமைய, இன்று அமுலுக்கு வரும் வகையில் குறித்த விலை குறைப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக லங்கா சதொச குறிப்பிட்டுள்ளது.

ஒரு கிலோ காய்ந்த மிளகாய் 25 ரூபாவினால் குறைக் கப்பட்டு, 1675 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட வுள்ளது.

ஒரு கிலோ பெரிய வெங்காயம் 15 ரூபாவினால் குறைக்கப்பட்டு 165 ரூபாவுக்கும், உள்நாட்டு சிவப்பரிசி 10 ரூபாவினால் குறைக்கப்பட்டு 169 ரூபாவுக்கும், கோதுமை மா 5 ரூபாவினால் குறைக்கப்பட்டு 230 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படவுள்ளது. (அ)

# மேலும் மூன்று வழக்குகளில் வசந்த முதலிகேவுக்கு பிணை



கொழும்பு, பெப். 02

மேலும் 3 வழக்குகள் தொடர்பில் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அழைப் பாளர் வசந்த முதலி கேவிற்கு கோட்டை நீதவான் நீதிமன்றம் பிணையில் செல்ல அனு மதி வழங்கியுள்ளது.

அது தொடர்பான வழக்குகள் நேற்று நீதிமன்றில் அழைக்கப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.

இதேவேளை, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டிலிருந்து வசந்த முதலிகேயை விடு வித்து கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று முன் தினம் உத்தரவு பிறப்பித்தது.

இந்த நிலையில், நிலுவையிலிருந்த மேலும் 3 வழக்கு களில், வசந்த முதலிகேவுக்கு நேற்று பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது. (அ)

# மின்வெட்டு நடைமுறை எதிர்த்து மன்றில் வழக்கு

கொழும்பு, பெப். 02

உயர்தரப் பரீட்சை நடை பெறும் காலத்தில் மின் துண்டிப்பை அமுல்படுத்த வேண் டாம் என இலங்கை மின்சார சபைக்கு உத்தரவிடுமாறு கோரி மேன்முறை யீட்டு நீதி மன்றில் எழுத்தாணை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள் ளன.

இலங்கை பொதுப் பயன் பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க, இலங்கை ஆசிரியர் சங்கத் தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் ஆயியோர் இந்த மனுக்களை நேற்று தாக்கல் செய்துள்ளனர். (ஐ)

# தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் சார்ள்ஸ் பதவி விலகவில்லை!

கொழும்பு, பெப். 02

தேர்தல் ஆணைக்குழு உறுப் பினர் பி. எஸ். எம். சார்ள்ஸ், பதவி விலகவில்லை என்று தெரியவந்துள்ளது. அண்மை யில் ஆணைக்குழு அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிய வர்த்த மானியில் அவர் கையொப்பமிட்ட தன் மூலமே இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் பி. எஸ். எம். சார்ள்ஸ், ஆணைக்குழுவின் கடமைகளில் இருந்து விலகினார் என்று கடந்த 25ஆம் திகதி செய்திகள் வெளி யாகின. அவரது பதவி விலகல் கடிதம் ஜனாதிபதியிடம் கிடைத்துள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பின்னணியிலேயே உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலொன்றில் அவர் கையொப்பமிட்டுள்ளார்.

இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவின் தலை வர் சட் டத்தரணி நிமால் புஞ்சிஹேவாவிடம் வினவிய போது, வாக்காளர்கள் தொடர்பான தகவல்கள் அடங் கிய வர்த்தமானி அறிவித்தலில் பி. எஸ். எம். சார்ள்ஸ் கையெழுத்து இட்டுள்ளார் என்று தெரிவித்தார். (ஐ)

# சீன தூதரக கடிதத் தலைப்பை பயன்படுத்தி போலி ஆவணம்!

## விசாரணைகளை ஆரம்பித்தது சி.ஐ.டி.

கொழும்பு, பெப். 02

இலங்கையின் கடன் மறுசீர மைப்பு தொடர்பில் சீன அரசாங்கத் தின் நிலைப்பாட்டை திரித்து சீன தூதரகத் தின் கடிதத் தலைப்பை பயன்படுத்தி போலி கடிதம் வெளியிடப்பட்டமை தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இலங்கைக்கான சீனத் தூதுவர் செய்த முறைப் பாட்டின் பிரகாரம் இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சீன தூதுவர் தமக்கு செய்த முறைப்பாட்டின் பிர காரம், இந்த விசாரணைகள் குற்றப் புலனாய்வு திணைக் களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

இந்த போலி கடிதத்தை உரு வாக்கியது யார்? இந்தக் கடிதத் தைப் பரப்பிய அசல் தரப்பினர் யார் என்பதைக் கண்டறியுமாறு சீனத் தூதுவர் கேட்டுக் கொண் டுள்ளார். இந்த கடிதம் ஜனாதிபதி மற்றும் நிதி அமைச்ச ருக்கு அனுப் பப்பட்டதாக இலங்கைக்கான சீன தூது வர் குறிப்பிட்டிருந்தார். எவ்வாறாயினும், இந்த கடிதம் சமூக வலைதளங் களில் தமது உத்தி யோகபூர்வ கடிதத் தலைப்பின் கீழ் பரவிய நிலையில், இது தொடர்பான கடிதம் போலியானது என்று ருவிட்டர் செய்தியையும் கொழும்பில் உள்ள சீன தூதரகம் வெளியிட்டுள்ளது. (அ)

# பாவனைக்குதவாத பால்மா அமைச்சின் உத்தரவை மீறி கால்நடைத் தீவனத்துக்கு!

கொழும்பு, பெப். 02

மில்கோ நிறுவனம், மனித நுகர் வுக்குத் தகுதியற்ற 635 மெட்ரிக் டன் பால்மாவை அனுமதியின்றி கால் நடைத் தீவனத்திற்காக நிறுவன மொன்றுக்கு விற்பனை செய்தமை குறித்து விவசாய அமைச்சு விசார ணையைத் தொடங்கியுள்ளது.

பால்மாவை விற்பனை செய்ய வேண்டாம் என அமைச்சின் செய லாளர் உத்தரவிட்டிருந்த போதி லும், மில்கோ நிறுவனத்தின் உயர் அதிகாரிகள், பணிப்பாளர் சபை யின் அனுமதியின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்படுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, இது தொடர்பில் விளக்கம் அளிக்குமாறு, அமைச்சின் செயலாளர் கடிதம் மூலம் மில்கோ தலைவருக்கு அறிவித்துள்ளார். (அ)

# இன்ஸ்ராகிராமில் அதிக பகிர்வு; இலங்கைக்கு ஒன்பதாவது இடம்!

நியூயோர்க், பெப். 02

2023 ஆம் ஆண்டில் உலகில் அதிகம் இன்ஸ்ரா கிராமில் பகிரப்பட்ட 50 இடங்களின் பட்டியலில் இலங்கை ஒன்பதாவது இடத்தைப் பிடித்துள் ளது.


2023ஆம் ஆண்டில் உலகளவில் இன்ஸ்ரா கிராமில் பகிரப்பட்ட முதல் பத்து இடங்களுக்குள் மாலைதீவு கள், டோக்கியோ, சிட்னி மற்றும் ஐஸ்லாந்து போன்ற போட்டோஜெனிக் தளங் களை இலங்கை விஞ்சி யுள்ளதாக உலகளாவிய பயண இணையத்தளமான பிக் 7 ட்ரவலின் தகவல் வெளியிட்டுள்ளது.

இத்தாலியின் மிலன் முதலிடத்தைப் பிடித் துள்ளது. இதனைத் தொடர்ந்து லண்டன், பாரிஸ், இஸ்தான்புல், நியூயோர்க், நேபாளம், சிக்காகோ, பாலி மற்றும் இலங்கை, சிட்னி முதல் 10 இடங் களைப் பிடித்துள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் பிக் 7 தளம் பிக் 7 மீடியா வின் 15 இலட்சம் பார்வையாளர்கள் மற்றும் உலகளாவிய ஆசிரியர் குழுவின் மாதிரி கணக்கெடுப் புடன், ஒவ்வோர் இலக்குக்கான ஹேஷ்டேக்குகள் மற்றும் ரிக்ரோக் பார்வையார் களின் எண்ணிக்கையை பகுப்பாய்வு செய்யும் மதிப்பெண் முறை அடிப் படையில் உலகின் 50 இன்ஸ்ட்ராகிராம் இடங்களின் பட்டியலை ஒன்றாக உருவாக்குகிறது.

பின்னர் அவர்கள் தங்கள் காட்சி, அழகு மற்றும் சமூக ஊடகங்களில் பிரபல்யம் ஆகிய வற்றின் அடிப்படை யில் இறுதி முடிவுகளை வரிசைப்படுத்துகிறார்கள்.

இதன்படி, 13 மில்லியனுக்கும் அதிகமான



இன்ஸ்ராகிராம் ஹேஷ்டேக்குகள் மற்றும் 16.4 பில்லி யன் டிக்டொக் பார்வையாளர்களை கொண்ட இலங்கை, பாரம்பரியத்தின் சின்னமான சிகிரியா குன்று முதல் தென் கடற்கரையின் பிரமிக்க வைக்கும் கடற்கரைகள் வரை கலாசார, இயற்கை மற்றும் வரலாற்று ஈர்ப்புகளின் தனித்துவமான கலவையை வழங்குகிறது.

இந்நிலையில், சுற்றுலா அமைச்சும் அண்மைய மாதங்களில் இலங்கையை மேம்படுத்துவதில் பல்வேறு நிகழ்வுகளை நடத்துவதுடன், நாட்டுக்கு வருகை தருப வர்களுக்கு பல நன்மைகளையும் வழங்குவதில் பங்கு வகித்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.02.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.